
www.padippakam.com

# விடியல்



COMPLIMENTS From TELO

தமிழீழ விடுதலை இயக்க
பிரச்சார ஏடு

படிப்பகம்

www.padippakam.com

# அம்மா !

அம்மா !
என்னைப் பற்றிக் கேட்க வரும்
நண்பர்களிட மெல்லாம்
கண்ணீர் சிந்திக் கதறுவதாக
கேட்டு வருந்துகிறேன்.

அம்மா !
இப்பொழுது
இந்த சிறைச்சாலையில் தான்
என் வாழ்க்கையின்
வசந்தங்களே பிறந்துள்ளது.

அம்மா !
என்னைச் சந்திக்க வரும்
கடைசிப் பார்வையாளனாக
இருக்கப் போவது
ஒரு கண்ணில்லாத விட்டில் பூச்சியல்ல
அது விடியலாகவே இருக்கும்.

- சமி - அல் - காசிம்
( பாலஸ்தீனக் கவிதையிலிருந்து )

---

## அஞ்சலி... அஞ்சலி... அஞ்சலி... அஞ்சலி...

தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தை முடக்கிவிடவென வீராப்புடன் செயற்படும் ஸ்ரீலங்கா இராணுவத்தின் அராஜக நடவடிக்கைகட்கு பலியான அனைத்து இராமேஸ்வர மீனவர்களுக்கும், அவர்தம் குடும்பங்களுக்கும் தமிழீழ விடுதலை இயக்கம் தமிழ் ஈழ மக்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

படிப்பகம்

www.padippakam.com

தமிழ் ஈழ விடுதலை இயக்கம்
TELO

தமிழ் ஈழ விடுதலை இயக்க
மகளிர் பிரச்சார ஏடு

★

விடியல் 1

கதிர் 3

★

ஜனவரி 1985

★

அன்பளிப்பு ரூபாய் 2

★

தொடர்புக்கு :

நிர்வாகி,

35/3, வெல்கம் காலனி,

அண்ணா நகர் மேற்கு,

சென்னை-600 101

# விடிவை நோக்கி....

இலங்கையில் தோன்றியுள்ள இனப்பிரச்சினை - இலங்கையரசை ஒரு உள்நாட்டுயுத்தத் தயாரிப்பு நிலைக்குக் கொண்டுபோயுள்ளது. இதுமட்டுமல்லாது, இந்த இலங்கை விவகாரம், அயல்நாடுகளுக்கும் பயமுறுத்தலாக மாறிவருவதும் தெரிந்ததே! அதாவது, குறிப்பாக இலங்கை மக்களையும், பொதுவாக இந்து சமுத்திரப்பிராந்திய மக்களையும் அச்சுறுத்திக் கொண்டிருக்கும் இலங்கை நிலைமை, ஸ்ரீலங்கா அரசின் அடாவடித் தனங்களையும், அது கரமிணைத்துள்ள சர்வதேச பயங்கரவாதிகளுடனான கூட்டையுமே பிரதிபலித்துக் கொண்டிருக்கின்றது.

பிரச்சினையைச் சுமூகமாகத் தீர்த்துவைக்கும் முயற்சிகளை விடுத்து, இன்னும் முன்னைய முரட்டுத்தனமான எண்ணங்களுடனேயே இப்பிரச்சினையை இலங்கையரசு அணுகிக்கொண்டுவருகின்றது. அந்நிய ஏகாதிபத்தியக் கரங்களால் வலுப் பெற்றுக் கொண்டு, உள்நாட்டுப்பிரச்சினையில் திமிராக நடந்து கொள்கின்றது JR அரசு! இரவல் யுக்திகளையும், கூலிப் படைகளையும் நம்பி, வெகுவான ஒரு மக்கள் சத்தியுடன் மோதிக் கொண்டிருக்கிறது ஸ்ரீலங்கா அரசு!

பொருளாதாரச் சிக்கலின் உச்சியை அணுகிக் கொண்டிருக்கும் இலங்கையரசு, தமது இராணுவத்தைப்பலப்படுத்தப் பல புதிய ஏற்பாடுகளால் தோன்றும் கூடுதல் செலவைச் சமாளிப்பதற்காக, இராணுவ பட்ஜெட் 5 மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது.

தமிழ்பேசுமக்கள் தரப்பை நோக்கும்போது, தமிழீழ விடுதலையில் மக்கள் காட்டும் ஆர்வமும், விடுதலைப் போராளிகள் மீதான மக்களாதரவும் பன்மடங்கு பெருகிக் கொண்டுவருகின்றன. அதாவது'நமது போராட்டம் வெகுஜனப் படுத்தப்படுகின்றது. என்பதுதான் பொருத்தம்!

மேலும், தமிழீழ விடுதலைப்போராளிகளால் அண்மைக் காலமாக ஸ்ரீலங்கா அராஜக இராணுவம் மீது நடத்தப்படும் அதிரடித்தாக்குதல்கள் உண்மையிலேயே அரசைக் கதிகலங்க வைத்துக்கொண்டிருக் கின்றன. அரசதரப்பில் பெருத்த சேதங்களை அவை ஏற்படுத்திக் கொண்டுவருகின்றன. இத்தகைய சேதங்கள் மக்கள் மத்தியிலும், வெளியுலகத்துக்கும் பரப்பப்படுவதில் அச்சங்கொண்ட அரசாங்கம், இப்போது மிகவும் பலமான பத்திரிகை, செய்தித் தணிக்கையை அமுல்படுத்தியுள்ளது, வெளியுலகுக்கு இத்தகைய தணிக்கைகள் மூலம் தான் தமது கையாலாகாத் தனங்களை மறைத்துக் கொள்ள முடியும்.

படிப்பகம்

www.padippakam.com



பிரச்சினை எந்தெந்தக் காரணங்களி னூடாகத் தோற்றமெடுத்ததோ, அதன் நிலைமறுப்பினை ஆராய்வதன் மூலம்தான் அந்தப்பிரச்சினைக்குத் தீர்வுகிடைக்கு மென்பது சமுதாய விஞ்ஞான நெறி! நமது தமிழ் பேசும் மக்களது பிரச்சினை எந்தெந்த ஒடுக்கு முறைகளினூடாக இவ்வாறு பூதாகாரமாக உருவெடுத்ததோ, அக்காரணங்களை ஆராய்ந்து அவற்றை விலக்கியதான நடைமுறைகளினூடாகத்தான் நமது பிரச்சினை தீர்த்து வைக்கப்பட வேண்டும். ஆனால் இலங்கையரசில் நடப்பது என்ன?

இலங்கையரசின் இனாவாத குடியேற்றத் திட்டங்களினால், நமது பாரம்பரிய நிலங்கள் பறிபோயின! இது நமது விடுதலைத் தேவையை— சுயநிர்ணய உரிமையை நாம் வெளிப்படுத்த மிகவும் முக்கிய காரணமாயிற்று! எனினும், இப்போதும் இதே குடியேற்றக் கொள்கைகளுடன் நமது பிரச்சினையை அணுகுகின்றது ஸ்ரீலங்கா அரசு! யாழ்பகுதியில் 30,000 சிங்களக் குடும்பங்களைக் குடியேற்றும் முயற்சியில் அரசு ஈடுபடுகின்றது.

**இது மட்டுமா?**

தமிழ்மாணவர்களுக் கெதிரான தரப்படுத்தல் முறையும் நாம் விடிவுதேடப்புறப் பட்டமைக்கான ஒரு காரணமாகும். ஆனால், இப்போது அமுல்படுத்தப்பட்டிருக்கும், பல்கலைக்கழக புதிய அனுமதிமுறையினால் மென்மேலும் நமது கழுத்தை நெரிக்கப்பார்க்கிறது. இலங்கையரசு!

எதிர்வரும் பிப்ரவரி 1984 இல் இலங்கையின் 37 ஆவது சுதந்திர தினம்! இதில் அனைத்து வீடுகளிலும், வாகனங்களிலும் தேசியக் கொடியேற்ற வேண்டுமென்று, இலங்கைப் பிரதம மந்திரியின் காட்டாய வேண்டுகோள்! தமிழ்பேசும் மக்கள் இத்தகைய கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் நிலைமையில் இல்லையென்பது இலங்கையரசுக்கு நன்கு தெரியும். இருந்தும் நம்மை இம்சைப்படுத்துவதற்காகவே இத்தகைய காட்டாய வேண்டுகோள் என்பது நமக்கு நன்கு புரியும்.

இவ்வாறு, தமிழ்பேசும் மக்களுக்கு எவையெவையெல்லாம் விருப்பமில்லையோ, அவற்றையெல்லாம் நடைமுறைக்குக் கொண்டு வருவதில் விருப்பமுடன் செயல்படுகின்றது அரசு! இவை, தமிழ் மக்களின் வெறுப்பை மென் மேலும் அதிகரிக்கும் செயலாகவே மாற்ற மெடுக்கின்றது. அதாவது ஒரே நாட்டில் உள்ள ஒரு இன மக்களைச் சீண்டுவதில் இன்பம் கண்டு கொண்டிருக்கின்றது ஸ்ரீலங்கா அரசு! இவற்றிற்கெல்லாம் தக்கபதிலளிப்பது நமது தமிழ் ஈழ விடுதலையாகவே இருக்கும்!! ★

வெளிவருகின்றது!

## ‘தீச்சுடர்’

தமிழ் மாணவர் அமைப்பின் மாதச் சஞ்சிகையான ‘தீச்சுடர், ஒடுக்கப்பட்ட மக்களின் சோக விழிகளுக்குள் கனல் வார்க்கும்! அழுகிய கலாச்சாரங்களைச் சுட்டெரிக்கும்!!

மாணவ சக்தியிடமிருந்து மேற்படி சஞ்சிகைக்கு முற்போக்கு ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

— தமிழ் மாணவர் அமைப்பு.

படிப்பகம்

www.padippakam.com

# மரண நேரங்களில் மலர்ந்த வரிகள்

### பிரான்ஸ் புரட்சிவாதி

## கப்ரியல் பேரி

பிரான்ஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரான தோழர் காப்ரியல் பேரி, ஜெர்மன் நாஜிகளால் சிறைபிடிக்கப்பட்டு கொல்லப்பட்டவர். குண்டடிபட்டு இறக்கு முன்னர், பேரி எழுதியனுப்பிய கடிதம் இதோ

''பணயக் கைதி என்ற வகையில் என்னைச் சில வினாடிகளில் சுட்டுக் கொல்லப்போகிறார்கள் என்று சிறைச்சாலைப் பாதிரியார் இப்பொழுதுதான் எனக்குத் தெரிவித்தார். எனது சாமான்களை எடுத்துச் செல்வதற்கு சர்ச் மெடி சிறை அதிகாரிகளுக்கு மனுப் போடும்படி உங்களை வேண்டிக் கொள்கின்றேன். எனது தஸ்தாவேஜிகள் சில இங்கே உள்ளன. ஒரு வேளை, அவை என்னை நினைவுறுத்த உறுதியாக இருக்கக்கூடும்.

''எனது வாழ்வு முழுவதிலும் ஒரு லட்சியத்தைப் பின்பற்றி ஒழுகி வந்தேன். அந்த லட்சியத்துக்குக் „கடைசிவரை நான் உண்மையாக நடந்து கொண்டேன் என்பதை என் நண்பர்கள் அறிவார்களாக! பிரான்ஸ் வாழட்டும் என்பதற்காக நான் இறக்கிறேன் என்பதை என் நாட்டு மக்கள் அறிவார்களாக!

''கடைசி முறையாக எனது மனச்சாட்சியைத் தொட்டுச் சோதித்து விட்டேன். வருந்துவதற்கு எனக்கு ஒன்றுமில்லை. இதை நீங்கள் எல்லோருக்கும் தெரிவிக்க வேண்டும் என்பதுதான் என் ஆசை. இன்னொரு முறை நான் பிறப்பேனேயாகில் இதே பாதையில் தான் மீண்டும் செல்வேன்.

''கம்யூனிஸம் என்பது உலகின் மறுபிறப்பு. அது ஓர் ஒளி பொங்கும் வைகறையைத் தோற்றுவித்துச் செயலாற்றிக் கொண்டு வருகின்றது என்று என் ஆருயிர் நண்பர் 'பால் வேயான் குதூரியர்' சொன்னது சரி என்று நான் திடமாக நம்புகின்றேன். 'மார்ஷல் காஷான்' எனக்கு ஒரு சிறந்த குருவாக வாய்ந்தார்; அதில் சந்தேகமில்லை.

''அதனால் தான் இவ்வளவு சித்தத் தெளிவோடு, இவ்வளவு நம்பிக்கையோடு நான் சாவை எதிர்நோக்கி நிற்கிறேன்!

''சென்று வருகின்றேன்! பிரான்ஸ் நீடூழி வாழ்க!''

### தமிழ் ஈழ தேசபிதா

## தங்கத்துரை

தமிழ் ஈழ விடுதலைக்காகப் போராடியவரும், இவ்வியக்கத்தின் தலைவருமான தமிழ் ஈழ தேசபிதா தங்கத்துரை, ஆயுள் சிறைத் தண்டனை பெற்று ஸ்ரீலங்கா பாஸிஸ நீதிமன்றில் ஆற்றிய உரையின் ஒரு பகுதி இதோ!

சிங்கள மக்களுக்கு ஒன்று சொல்லிக் கொள்வேன். எமது பூமியில் மட்டுமல்லாது உங்கள் நாட்டின் பல இடங்களிலும் மிக அண்மைக் காலம்வரை தமிழ் மக்கள்மீது பல தடவைகள் உங்கள் நாட்டு அதிகார அமைப்பினால் கட்டவிழ்த்து விடப்பட்ட பயங்கரவாதத்தை சரியென நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்ளா? அன்றியும் இவைமட்டுமல்லாது, நம்மை நாமல்லாதவராக்கும் முயற்சியிலும் பலவழிகளிலும் ஈடுபட்டுவரும் உங்கள் அரசின் நாகரீகமற்ற நடவடிக்கைகளின் பாதிப்பில் இருந்து எம்மக்களை மீட்க நாம் முன்னின்றவையைத்தான் தவறு என்று சொல்வீர்களா?

''அப்படியாயின் ஒரு உயர்ந்த இலட்சியத்தை முன்வைத்துப் போராடிய எம்மீது பயங்கரவாதத் திரையைப் போர்த்தி உங்கள் நாட்டுச் சட்டங்களிலும் பயங்கரவாதத்தைப் புகுத்திப் புதுப் பெருமையைத் தேடிக் கொண்ட உங்கள் அதிகார அமைப்பு எம்மீது விசாரணை என்ற பெயரில் நடத்தும் கண் துடைப்புக்களையும் சரி என ஏற்றுக் கொள்கின்றீர்களா?

''நாம் விடுதலை பெறுவது நிதர்சனமான உண்மை. அதன் பின்னர் உங்கள் நாட்டின் சட்டப் புத்தகங்களில் நிரந்தர இடம் பெற்றுவிட்ட எச்சட்டங்களும் எம்மை அணுகா. அப்படியாயின் இச்சட்டங்களையும், பயங்கரவாதத்தையும் எதி காலத்தில் நீங்களே சுவீகாரம் எடுப்பீர்கள் என்ற கையறு நிலையை இப்போதே எய்தி விட்டீர்களா?

''எனவே நாம் எமது கடமையை முடிந்தவரை செய்த மனநிறைவுடன் எதிர் காலத்தை சிறையில் கழிக்கவோ வேண்டுமாயின் மரணத்தைக் கூடத் தழுவ நாம் தயங்கவில்லை.

''வாழ்க தமிழ்! வளர்க தமிழ் ஈழம்!!''

படிப்பகம்

www.padippakam.com

# சுதந்திர இலங்கைதான் என்ன?

ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்களுக்கெதிராக, ஸ்ரீலங்கா அரசு நடத்தி வரும் அரசியல் கலாச்சார அடக்குமுறைகளும் இன்று நேற்று ஆரம்பித்தவையல்ல. 1948 இல் பிரிட்டிசார் போலிச் சுதந்திரம் வழங்கிவிட்டுச் செல்வதற்கு முன்னரேயே தேசிய இனங்களுக்கிடையே பிரச்சினை ஏற்பட்டுவிட்டது. அன்றைய முதலாளிய அரசியல் தலைவர்களிடம் ஆட்சி கைமாறிய பின்பு இப்பிரச்சினைகளின் விசுவரூப விளைவுகள்தான் இன்று ஈழ மக்கள் வலுக்கட்டாயமாக அனுபவிக்கும் கொடூரங்கள் இதன் மத்தியில் தனது 37வது சுதந்திர தினத்தை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்ற ஸ்ரீலங்கா அரசு, அன்றிலிருந்தே தமிழ் தேசிய இனத்தின் மீது மேற்கொண்ட பலாத்கார நடவடிக்கைகளையும், இடம் பெற்ற முக்கிய சம்பவங்களையும் நிரல் படுத்தவேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

1915—சிங்கள மக்களுக்கும் தமிழ் பேசும் முஸ்லீம் மக்களுக்குமிடையே இனக்கலவரம் ஏற்பட்டது.

1920—நடேச ஐயர், A. E. குணசிங்கா ஆகியோரின் தலைமையில் அகில இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சம்மேளனம் ஏற்படுத்தப் பட்டது.

1921—இலங்கைத் தேசிய காங்கிரஸ் பிளவு ஏற்பட்டது.

1931—நடேச ஐயரால் அகில இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கம் ஆரம்பிக்கப் பட்டது.

1931—சேர் பொன் அருணாசலம் டொனமூர் ஆணைக்குழுவில் இனவாரிப்பிரதிநிதித்துவத்துக்கான கோரிக்கையை விடுத்தார்.

1936—தோட்டத் தொழிலாளர்களில் 1,45,000 பேர் சட்டசபைத் தேர்தலில் வாக்குரிமை பெற்றிருந்தனர்.

1944—இலங்கையின் சகல அரசாங்க பாடசாலைகளிலும் போதனா மொழி சிங்களமாக இருக்க வேண்டுமெனவும், உத்தியோக இணைவுப் பரீட்சை சிங்களமாக இருக்க வேண்டுமெனவும் அரசாங்க சபையில் J. R. ஜெயவர்த்தனாவினால் தீர்மானம் கொண்டுவரப் பட்டது.

1947—நேரு, D.S. சேனாநாயகா ஆகியோருக்கிடையே, இலங்கை வாழ் இந்தியப் பிரஜைகளில் யார் யார் பிரஜாவுரிமை பெறுபவர்கள் என்பது பற்றிப் பேச்சு வார்த்தை இடம் பெற்றாலும் இது பலனளிக்க வில்லை,

1948—பிரிட்டிசாரிடமிருந்து இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கப் பட்டது.

1948—D S. சேனாநாயக்காவினால் 10 இலட்சம் இந்திய வம்சாவழித் தமிழர்களது பிரஜா உரிமைப் பறிக்கப் பட்டது.

1949—இந்த ஆண்டிலிருந்து 1964 வரை 1,84,771 பேர் இந்தியாவுக்கு அகதிகளாகத் திருப்பி அனுப்பப் பட்டனர்.

1950—இலங்கை இந்தியக் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எனப் பெயர் மாற்றப் பட்டது.

1956—களனியில் இடம் பெற்ற மாநாடு ஒன்றில் U.N.P. ஆனது தனிச் சிங்களச் சட்டம் பற்றிய தீர்மானத்தைக் கொண்டு வந்தது. அதாவது அரச கரும மொழி சிங்களமாகவே இருக்க வேண்டும் என்பதாகும்.

1956—தமிழ் தேசிய இனத்துக்கு உரிமை வழங்கல் சம்பந்தமாக S.W R.D. பண்டாரநாயக்காவுக்கும் S.J.V. செல்வநாயகத்துக்கு மிடையே (பண்டா-செல்வா) ஒப்பந்தம் கைச்சாத்தானது.

1958—'சிங்கள-ஸ்ரீ' வாகனங்களில் பொறிக்கப்பட வேண்டும் என்ற சட்டம் அரசாங்கத்தால் கொண்டுவரப் பட்டதையடுத்து, 1வது தமிழ் சிங்கள இனக் கலவரம் உருவெடுத்தது,

படிப்பகம்

www.padippakam.com



1961—இன ஒடுக்கு முறைகளையும், உரிமைப் பறிப்புகளையும் கண்டித்துத் தமிழ்த் தலை கள் நடத்திய சத்தியாக் கிரகப் போராட்டம் முறியடிக்கப் பட்டது.

1962—கொழும்புத் துறைமுகத்தில் தொழில் புரியும் தொழிலாளர்கள் வேலை நிறுதத்ம் மேற் கொண்டனர்.

1963—ஜனவரி மாதத்தில் இ. போ. சபைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.

1963—ஜூன் மாதத்தில் வெள்ளவத்தைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.

1963—செப்டெம்பர் 29 இல் இடதுசாரிக் கட்சிகள் சேர்ந்து 21 அம்சக் கோரிக்கையை முன்
செய்யப்பட்டது.
வைத்தனர். அவசரகால நிலமை இக்காலத்தில் தான் பிரகடனம்
ஆனாலும் வேலை நிறுத்தங்கள் தொடர்ந்தன. வேலை நிறுத்தத்தைக் கைவிடா
விட்டால் வேலை நீக்கம் செய்யப்படுவீர்கள் என 1964-ஜனவரி-09இல் அரசு அறிக்கை
விட்டது. ஆனால் 1964 மேதின ஊர்வலமும் சகல இடதுசாரித் தொழிற் சங்கங்க
ளாலும் மேற்கொள்ளப்பட்டு, 1964 செப்டம்பர்- 12 இல் 21 அம்சக் கோரிக்கை
வெற்றி பெற்றது.

1962-வரவு செலவுத் திட்டத்தைத் தொடர்ந்து மக்களின் வாழ்க்கைத் தரம் வீழ்ச்சி யுற்றமை, இவ்வாறான வேலை நிறுத்தங்களுக்கு தூண்டுகோலாக அமைந்தது.

1964—அக்டோபர் 10-ம் நாள் ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தம் கைச் சாத்திடப்பட்டது. இதன்படி அப்போதிருந்த 9,75,000 மலையக மக்களில் 5,25,000 பேருக்கு 15 வருடத்தில் இந்தியப் பிரஜா உரிமையும், 3,00,000 பேருக்கு இலங்கை பிரஜா உரிமையும் எஞ்சி யோரது நிலை பற்றி 19 4 இல் தீர்மானிப்பதென்றும் தீர்மானிக்கப் பட்டது. இதன் பின்னர் 1974இல் ஸ்ரீமா-இந்திரா ஒப்பந்தத்தின் படி எஞ்சியுள்ள மலையக மக்களை இரு நாடுகளும் தமக்குள் சம பங்கீடு செய்து கொள்வதெனத் தீர்மானிக்கப் பட்டது.

1965—இக்கால கட்டத்தில் கிரைக் கொல, மடக்கும்பா, மேட்பீல் தோட்டங்களில் கொந்த ராத்துப் பிரச்சினை உருவெடுத்தது. பஞ்சப்படி 17.50 சதப் போராட்டம் நடை பெற்றது.

1965—தமிழ் மொழி விஷேட மசோதா இக்காலத்தில் கொண்டுவரப்பட்ட போது, கம்யூனிஸ்ட் கட்சி (C P), லங்கா சமசமாசக் கட்சி (LSSP) ஆகிய இடதுசாரிக் கட்சிகள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து, தமிழர் விரோதக் கோஷமிட்டபடி மசோதாவை எதிர்த்து ஊர்வலம் நடத்தினர்.

1966—இதன் போதுதான் டட்லி-செல்வா ஒப்பந்தம் கைச் சாத்திடப் பட்டது.

1970—மலையகத்தில் டெல்டா தோட்டமும் அது போல வேறு பல தோட்டங்களும் அரசாங் கத்தால் சுவீகரிக்கப் பட்ட போது, மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். அந்த வகையில் முன்னின்று போராடிய மலையகத் தமிழ் இளைஞன் சிவனு லட்சுமணன் போலீசாரால் படுகொலை செய்யப் பட்டான்.

1970—தொடர்ந்து ஸ்ரீமா தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கம் பல்கலைக் கழக அனுமதிக்கான தரப்படுத்தலை அமுலுக்குக் கொண்டு வந்த போது பல்வேறு கண்டனங் களும் எதிர்ப்புகளும் தெரிவிக்கப் பட்டாலும் எது வித பிரயோசனமும் ஏற்படவில்லை.

1971—ஏப்ரல் இல் அரசுக் கெதிரான கிளர்ச்சி உருவெடுத்த போது சிங்கள வாலிபர்களும் யுவதிகளும் மிருகத்தனமாகச் சுட்டுக் கொல்ல பட்டனர். தலைமை தாங்கிய ரோகண விஜே வீராவுக்கு மரண தண்டனை விதிக்கப் பட்டதோடு, வாசுதேவ நாணயக்காரா கைது செய்யப் பட்டார்.

1972—மலையகத்தில் மீண்டும் தமிழர்களது தோட்டங்கள் சுவீ ரிக்கப்பட்டு சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டது.

1972—மே மாதம் 22ம் நாள் யாழ்ப்பாணத்தில் பௌத்த குடியரசின் அரசியல் சாசனம் தமிழர் கட்கு எதிராக அமைந்தது.

1974—ஜனவரி 10ம் நாள் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற தமிழாராய்ச்சி மாநாடு கலைக்கப்பட்டது. மக்கள் பயங்கரமாகத் தாக்கப் பட்டனர்.

1977—U.N.P. ஆட்சிக்கு வந்தது, அத்துடன் தமிழினத்துக் கெதிரான ஒடுக்கு முறைகள் விசுவ ரூப மெடுத்தன.

(18-ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com

# நடுத்தர வர்க்கத்தின் நழுவல்

-- லூ-சூன்

—0—0—

கனவு. பள்ளிப் பருவக் கனவு.

ஒரு ஆரம்பப் பள்ளிக்கூடம். வகுப்பறையில் உட்கார்ந்திருக்கிறேன்.

ஒரு கட்டுரை எழுத ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறேன்.

கட்டுரையில் எனது அபிப்பிராயத்தை எப்படி எழுதுவது என ஆசிரியரைக்கேட்டேன்

''அது மிகக் கடினம்!... இரு, உனக்கு ஒரு கதை சொல்றேன்''— ஆசிரியர் மூக்குக் கண்ணாடிக்கு மேலாக ஓரப் பார்வை பார்த்தவாறு என்னிடம் கூறினார்.

''ஒரு குடும்பத்தில் ஆண் குழந்தை பிறந்தது. பெற்றோர் மிகவும் சந்தோஷமடைந்தனர். குழந்தைக்கு ஒரு மாதம் ஆனது. நல்ல வளர்ச்சி! வரும்விருந்தினர்களிடம் பெற்றோர் குழந்தையைக் காட்டினர். அவர்களது புகழுரைகளைக் கேட்க பெற்றோர் ஆசைப்படுவது இயல்புதானே!

''இக்குழந்தை செல்வச் சீமானாய் ஆவான்'' என்றார் ஒருவர். அந்த உத்தமருக்கு பெற்றோர் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்தனர்.

:'இக்குழந்தை பெரிய அதிகாரியாவான்' எனமற்றொருவர்புகழ்ந்தார். பெற்றோருக்கு ஒரே ஆனந்தம்! அதிகாரியாக்கிய அவருக்கு புகழாரங்கள் சூட்டப்பட்டது.

''இக்குழந்தை மரணமடைவான்'' என ஒருவன் சொன்னான். பெற்றோர் உள்ளம் கொதித்தது. அனைவரும் சேர்ந்து அவனை நையப்புடைத்துவிட்டார்கள்!

---

**சீனாவின் சமூகப்புரட்சிக்கான கலாச்சாரத்தளத்தைக்கட்டியெழுப்புவதில் முன்னணிப் போராளியான தோழர் லூ-சூன், தனது மருத்துவத் துறையை விட்டு, சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தினராகி சீன மக்களின் விடுதலைக்காகப் பாடுபட்டவர்.**

---

''அந்தக் குழந்தை சீமானாய் வருவதும் பெரிய அதிகாரியாய் ஆவதும் நாளை பொய்யாகிப் போகலாம். ஆனால் அவன் இறப்பதென்னவோ உறுதி! எனினும் இங்கே பொய்யைச் சொன்னவனுக்குப் புகழாரம்! உண்மையைப் பேசியவனுக்கு அடி உதை! அப்ப...நீ வந்து...''

''அய்யா, நான் பொய் சொல்லவும் விரும்பவில்லை= அப்படியானால் நான் என் கருத்தை எப்படி வெளியிடுவது?''

ஆசிரியர் சொன்னார் ''அந்த மாதிரி நேரங்களில் நீ சொல்ல வேண்டியதெல்லாம், இந்தக் குழந்தையைப் பாருங்களேன்! ஆகா! ஆகா! இவன் வந்து ஓஹோ... ஓஹோ! குழந்தையைப் பற்றி என்னுடைய கருத்தா? ஹி... ஹி...ஹி...ஹி...''

★

—நன்றி மனஓசை

படிப்பகம்

www.padippakam.com

# எதிரியைக் குறி வைப்போம்

அன்புத்தோழிக்கு,

வணக்கம்,

நமது தமிழீழ விடுதலைப் போராட்டம் இப்போது உச்சக் கட்டத்தையடைந்துள்ளது. தமிழீழப்பகுதியில் அராஜக இராணுவத்தை எதிர்த்தும்— சர்வதேசப் பயங்கரவாதிகளுக்குச் சவாலாகவும் நமது போராளிகளால் நடத்தப்பட்டுவரும் அதிரடித் தாக்குதல்கள், நமது தேசிய விடுதலைக்குச்சர்வதேசஆதரவுகளைத் திரட்டித் தருவதுடன், நமது எதிரிக்குப் பலத்த சேதங்களையும் ஏற்படுத்திக் கொண்டு வருகின்றன.

நமது இளம் போராளிகள் ஈழமண்ணில் சிந்தும் இரத்தத்திலிருந்துதான் நமது விடுதலை பிறக்கப் போகின்றது. நமது போராளிகள், தங்களை அர்ப்பணிப்பதன் மூலம் தான் தமிழீழத்தின் எதிர்காலச் சமுதாயம் சுதந்திரமாகத் தலை நிமிர்ந்து வாழ வழிவகுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்பேசும்மக்கள் —தமதுஇறைமையை மீட்பதற்காக நடத்தும் இந்தப்போரட்டத்தில் தம்மைப்பங்காளர்களாக மாற்றிக் கொள்வதன் மூலம் விடுதலைப்போராளிகளுக்கு மிகவும் பயன்பட்டுக் கொண்டிருக் கின்றார்கள். அதாவது, தமிழீழ மக்கள் தான் விடுதலைப் போராளிகள்; விடுதலைப்போராளிகள் தான் தமிழீழ மக்கள் — என்ற நிலைக்குப் போராளிகளும் மக்களும் கலந்துள்ளனர். இந்த வெகுஜனபலத்தினால் தான் நமது போராளிகள் அரச இராணுவத்தின் கண்களில் சிக்கிக் கொள்ளுதல் அரிதாகின்றது. இத்தகைய பலம் பெருகியிருக்கும் வரைக்கும், நமது போராட்டத்தை முறியடிக்க அரசு எடுக்கும் எந்த நடவடிக்கையும் வெற்றிபெறப் போவதில்லை என்பது நிச்சயம்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியும் நமது போரட்டத்தின் வெற்றிக்குப் பக்கபலமாக இருக்கக்கூடிய சாத்தியங்கள் தற்சமயம் பெருகியிருக்கின்றன.

இலங்கையைப் பொறுத்தவரை, அங்கே வறுமையின் எல்லைக்கோட்டில் வாழ்பவர்களில் அதிகமானோர் சிங்கள மக்களாகும். இலங்கை தற்சமயம் கைக்கொண்டுள்ள பொருளாதாரக் கொள்கைகளும், அயல் நாட்டுக் கொள்கைகளும் இலங்கையில் உள்ள அனைத்துமக்களது வெறுப்பையும் இலங்கை அரசின் பக்கம் இழுத்துக் கொள்ளவைக்கின்றன, இந்தப் பொருளாதாரக் கொள்கைகளினால்— சிங்களமக்களே அதிகமாகப் பாதிக்கப்பட்டுக் கொண்டு வருகின்றார்கள். ஆனால், அரசாங்கமோ ''எம்மை உள்நாட்டு யுத்தம் நெருங்கிக் கொண்டிருக்கின்றது! நமது சுதந்திரத்திற்கும் ஐக்கியத்துக்கும் பாதிப்பு ஏற்படப்போகின்றது; இதற்கு எதிராக நாம் போராடவேண்டும்'' எனக் கூறிக்கொண்டு சிங்கள மக்களை நமக்கு எதிராகத்திருப்பிக் கொண்டிருக்கின்றது.

இலங்கையின் பொருளாதாரத்தின் கணிசமான ஒருபகுதி, உல்லாசப்பயணிகள் வருகையால் ஈடுசெய்யப்படுகின்றது. 1983ம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரத்தின் பின்பு, இவ்வுல்லாசப் பயணிகளின் வருகை பெருமளவு குறைந்துள்ளது. இதன் விளைவு இலங்கையின் பொருளாதரத்தில் மிகவும் முக்கியமான ஒரு இடத்தைப்பிடித்துள்ளது.

மேலும், சர்வதேசக் கம்பனிகள், இலங்கையைத் தங்கள் வியாபார ஸ்தலமாக்கியதினால் ஏற்பட்ட நவகாலனித்துவத்தினால், இலங்கை மக்கள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர். இலங்கையின் தரகு முதலாளித்துவ அரசு இத்தகைய திறந்த பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்தி, மக்களை வெகுவாகச் சுரண்டி— அவர்களை வெறும் ஓட்டாண்டியாக்கிவருகின்றது.

## தோழிக்கு மடல்

படிப்பகம்

www.padippakam.com



இத்தகைய பெரிய பொருளாதாரப் பிரச்சினைகள் இலங்கை மக்களின்தலைக்கு மேல் காத்துக்கொண்டிருக்க; இலங்கை மக்கள் இன்னமும் ஸ்ரீலங்கா தரகுமுதலாளித்துவ அரசைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள் என்றால்................?

உள்நாட்டு அச்சுறுத்தலைக் காரணம் காட்டி; இலங்கை அரசு அமெரிக்கா, பிரித்தானியா, சீனா போன்ற நாடுகளிலிருந்து பாதுகாப்புச் செலவுக்கெனப் பெருமளவு பணத்தை வாங்கி, நிர்வாகத்தை ஓட்டிக் கொண்டிருக்கின்றது. மக்களுக்கும் இதேகாரணத்தைக்காட்டி அவர்களை வாயடைக்க விட்டது.

இலங்கையில் உள்ள அனைத்து மக்களது பொதுஎதிரி ஸ்ரீலங்கா அரசென்பது இப்போது விளங்கும். எனவே, இலங்கை மக்களை நமது பொது எதிரிக் கெதிராக அணி வகுத்துக் கொள்ளல் நமது போராட்டத்தை விரைவுபடுத்தும் என்பது திண்ணம். ஆனால் இலங்கையில் உள்ள பெரும்பான்மைச் சிங்கள மக்கள்தற்சமயம் இனவாதம் ஊட்டிவளர்க்கப் படுகின்றனர். எனவே, நமது போராட்டங்களைப் பற்றி— நமது கொள்கைத் திட்டங்களைப்பற்றி நாம் சிங்களவர்களுக்கு எதிரானவர்களல்ல என்பது பற்றிச் சொல்லுவது அவர்களுக்கு நேரடியானதொரு விளக்கத்தையளிக்கப்போவதில்லை.

எனவே இவர்களை பொருளாதாரக் காரணம் காட்டி நமது பொது எதிரியை அவர்களுக்கும் இனங்காட்டிக்கொள்ள வேண்டும். நமது போராட்டத்தில் இதுமிகவும் முக்கியமானதொரு கட்டமாகும். அதாவது, இலங்கையில் இத்தனை பெரிய பொருளாதாரப்பிரச்சினைகள் இருந்தும் மக்களுக்கு அவை தாக்கத்தை உணரச் செய்யவில்லை. மக்களைப் பொருளாதாரப்பிரச்சினைக்குள் ஈர்க்கவேண்டியதே நமது போராட்டத்தின் ஒரு நோக்கமாக இருக்கவேண்டும்.

இதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? நமது போரட்டவடிவங்கள் இலங்கையரசைப் பொருளாதார ரீதியில் வீழ்ச்சியயுறவைப்பதற்கு ஏதுவாக இருக்க வேண்டும். இலங்கையரசு, பொருளாதாரத்தில் வீழ்ச்சியுறும் போதுதான்— இலங்கையரசின் முடியும் அடங்கும்; சிங்கள மக்களுக்கும் அரசின் பொருளாதார நிலைவன்மைகளும் விளங்கும்.

அண்மையில் தமிழ்ப்பகுதியில் நடந்த ரயில் தாக்குதல் இலங்கையரசின்ற்கு பெருத்த சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையரசுக்கு இதுஒரு குறிப்பிடத்தக்க இழப்புதான் என்பதை இலங்கையரேச ஒப்புக் கொண்டுள்ளது.

நாம்' பெரும்பான்மைச் சிங்கள மக்களின் ஆதரவைத்திரட்டிக் கொள்ளல் மிக மிக முக்கியமாகும். சிங்களமக்கள் எதிரியை இனங் காணவேண்டும். ஸ்ரீலங்க அரசுக் கெதிராக பலமுனைகளிலிருந்து நெருக்கடிகள் கிடைக்க வேண்டும். அதாவது, இப்போது ஆட்சிப்பீடத்திலிருக்கும் பயங்கரவாதத்தின் தலைமைப் பீட அரசு வீழ்ச்சியுற வேண்டும். அரசுகூட்டுச் சேர்த்துள்ள சர்வதேசப்பயங்கரவாதிகள் ஓட்டமெடுக்கவேண்டும். அப்போதுதான் நமது தமிழ்பேசும் மக்களுக்குமட்டுமல்ல— இலங்கை மக்களுக்கே விடிவுகாலம்!

- ஈழ மகன்

## சிங்கள மக்கள் மத்தியில் ஸ்ரீலங்கா அரசுக்கு எதிர்ப்பு!

பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் பொது நலத் தொண்டர்கள் முதலியோரால் கடந்த 1983 டிசெம்பர் 13-இல் கொழும்பில் ஒரு மாநாடு நடத்தப்பட்டது. இதில்

1. மனித உரிமைகள்.
2. அடிப்படைச் சுதந்திரம்.
3. கல்வி மூலம் அமைதி.

போன்ற தலைப்புகள் பற்றி, ஆராயப்பட்டன இலங்கை அங்கத்தினர்கள் மாத்திரமின்றி, இந்தியா, பிலிப்பின்ஸ், வியட்நாம் போன்ற நாடுகள் சார்பாகவும் அங்கத்தினர்கள் கலந்து கொண்டனர். மேலும் இக்கருத்தரங்கு, இவ்வரசின் பலத்த கெடுபிடிகளுக்கு மத்தியில் நடத்தப்பட்டதாகத் தெரியவருகின்றது. பணவீக்கத்தால் ஏற்பட்டுள்ள விலைவாசியுயர்வு, வேலையல்லாத் திண்டாட்டம், மாமூல் நிலைமையின்மை, பொருளாதார நெருக்கடிகள் பற்றி இக்கருத்தரங்கில் ஆராயப்பட்டதாக அறியக் கிடக்கின்றது.

(19-ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com

# ஒரு ஈழச் சிறுவனின் தேடல்

ஒரு ஈழச் சிறுவனின் தேடல்

யோல் ஆமிக் காரனே!
மண்ணெண்ணெய் விளக்குயிரில்
இக்கிறுக்கல்கள் உனக்காகவே!

கருகிய பிணக்குவியலில்
கண்டெடுத்த ஏதோ எலும்பை
அப்பாவினதென்று
கடலிலே சேர்க்கச் சென்ற
அம்மாவின்
கற்பையும் கரைச்சாயாமே?

உலைப்பானை மேலே
சிலந்தி
ஒரு வாரம் கூடுகட்டி
பசியாலே சுருண்ட தங்கை
இன்னமும் எழும்பவில்லை

வேலியின் ஓட்டையாலே
உனை நித்தமும் காண்கிறேனே!
ஒரு நாளும் சிரிச்சாயா நீ!
என் சிரிப்பு அழுகையாகி
அழுகையும் கோவமாகி
கோவமோ ரோசமாகி
தேடுகிறேன் வழி ஒன்றை....!
மேலும்!

ஆமட்காரின் மேலே
நீ அணைச்சிருக்கும் இயந்திரத்துவக்கு
நீ பெற்ற பிள்ளையா?
அல்ல
அமெரிக்கப் பிள்ளையா?

முந்த நாள் தொடக்கம் அக்கா
மூலைக்குப் போயிட்டா!....
ஆனால் இப்போ
குடிசையில் கொடி உயர்த்த
ஊசி நூல் தேடுகிறாள்.

எங்களுக்குத் தீபாவளி போல
உங்களுக்கு சுதந்திர விழாவாம்.
கொடி பறக்கா வீடெல்லாம்
தீப்பிறக்கும், உயிர் துறக்கும்.
அதுதான் அக்கா
ஊசி நூல் தேடுகிறாள் போலும்,
சுதந்திரம் என்றால் என்ன?
எத்தனை வீடென்றாலும்
எத்தனை குண்டென்றாலும்
கொளுத்தலாம் சுடலாம் என்றோ?
எங்களுக்குச் சுதந்திரம் என்றால்
எப்பவும் கண்ணீர் விடலாம்
எப்பவும் உயிர் விடலாம்.
நிழலில்லா இரவுகளில்
ஆமி வாறான் என்றால்
அழுதடங்கிப் போவான்
எங்கள் சின்னப்பாப்பா
நேற்றிரவு சொன்ன போது
சிரிக்கிறான்! சிரிக்கிறான்!!
ஈழத்தில் இனிப் பிறக்கும் பாப்பா
கொப்பூழை வெட்டும் போதே
'துவக்கெங்கே என்று கேட்பான்
அதற்கு முன்
தேடுகிறேன் நான்....

படிப்பகம்

www.padippakam.com





# தலைவருடன் செவ்வி

**ரெலோ அண்மையில் மேற்கொண்ட அதிரடித் தாக்குதல்களுக்கான காரணங்களை பற்றிச் சற்று விளக்கமளிக்க முடியுமா?**

இவற்றிற்குப் பல காரணங்கள் இருந்தாலும், குறிப்பாகப் பின்வருவனவற்றைச் சொல்லலாம்.

1. அரசியந்திரங்களைப் பேணிக்காத்துக் கொண்டிருக்கின்ற சிறிலங்கா இராணுவத்தை நிலைகுலைய வைத்தல்.

2. சர்வதேச ரீதியில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வெளிக்கொணரல்.

3. தமிழீழ மக்களை அழிக்க ஏகாதிபத்தியங்களின சதிகளுடன் தென்பகுதியிலிருந்து வருவதற்கும், போவதற்கும் மிகவும் பாதுகாப்பான பாதை புகையிரதமார்க்கமே எனச் செயற்படுகின்ற இந்த இனவெறியர்களின் பயணங்களை முறியடித்தல்.

4. அரச இராணுவத்திடமிருந்து, பெருமளவு ஆயுதங்களைக் கைப்பற்றல்.

5. அரச இராணுவத்தினருக்கு உளவில் ரீதியான பீதியை ஏற்படுத்தல்.

6. தமிழீழ மக்களுக்கு தமது விடுதலை மீதான நம்பிக்கையை வலுப்படுத்தல்.

**இத்தாக்குதல்களால் அரச தரப்பில் காணக்கூடியதாயிருந்த குறிப்பிடத்தக்க பாதிப்புகள் எவை?**

அரசு ஸ்தம்பிதமடைந்து போனதைக் காணக்கூடியதாக விருந்தது. சாவகச்சேரித் தாக்குதலையடுத்து, தரைப்படையினர் அப்பகுதி வழியே ரோந்து வருதல தடைப்பட்டது. விமானப்படையே ஹெலிகாப்டர் மூலம் தமது ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டது.

மேலும், தாக்குதலின்போது, இறந்த இராணுவத்தினரின் எண்ணிக்கையும், போராளிகளால் அழிக்கப்பட்ட இராணுவ வாகனங்கள் பற்றிய விபரங்களையும் துணிந்து சொல்ல மறுத்திருக்கின்றது அரசு! இவை இராணுவத்திரையும், அரச பயங்கரவாதத்துக்கு ஆதரவான மக்களையும் மனந்தளராமல் வைத்துக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளேயாகும்.

**'வீரவேங்கை' ஆசிரியர் 'ரெலோ' பிரபாகரன் வழியைப் பின்பற்றுவதாகக் கூறியிருக்கின்றாரே?**

நான் இந்த ஆசிரியருக்குச் சொல்லிக் கொள்வது இதுதான். கெரில்லா யுத்தம் என்பது பிரபாகரனால் ஆரம்பிக்கப்பட்டதொன்றல்ல. அப்படி இவர் நினைப்பது கெரில்லா யுத்தத்தின் முன்னோடிகளான மா-சே-துங், சே-குவேரா போன்ற புரட்சித் தலைவர்களைக் கொச்சைப்படுத்துவதாகவே இருக்கும்.

'ரெலோ'வின் தாக்குதலுக்கும், இதற்கு முன்பு தமிழீழப் பகுதியில் நடந்த தாக்குதல்களுக்கும் இடையே பெரிய வித்தியாசங்கள் குறிப்பிடப்படும்படியாகவுள்ளன. 'ரெலோ'வின் தாக்குதலின்போது,

படிப்பகம்

www.padippakam.com


**1. பெருமளவு அரச கூலிப்படையினரை அரசு இழந்து, அரசு இயந்திரங்கள் ஸ்தம்பிதமாயின.**

**2. அரச இராணுவத்தின் பெருமளவு ஆயுதங்கள் நமது போராளிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.**

**3. தாக்கிவிட்டு ஓடிமறையும் நிலையன்றி, நமது போராளிகள் இராணுவத்தினரை எதிர்த்து நின்று தாக்கியிருக்கின்றனர். தாக்குதல் நடந்த இடத்திற்குக் கொலை வெறியுடன் விரைந்துவரும இராணுவத்தினர் இடையிலேயே மறிக்கப்பட்டுத் தாக்கப்பட்டுள்ளனர். இதனால் மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கக்கூடியதாக இருந்தது. அண்மையில நடந்த தாக்குதல்களில், சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத் தாக்குதலுடன் நடத்தப்பட்ட கைதடித் தாக்குதலும்; ரயில் தாக்குதலுடன் நடத்தப்பட்ட பரந்தன் தாக்குதலும் மக்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக நடத்தப்பட்ட தாக்குதல்களேயாகும்.**

**சாவகச்சேரித் தாக்குதலினால் தான் மன்னாரில் கூடியளவு மக்கள் அழிய நேர்ந்ததெனக் கூறப்படுவது பற்றித் தங்கள் கருத்து என்ன?**

**இதில் எந்தவித உண்மையும் இல்லை. சாவகச்சேரித்தாக்குதல்களுக்கும், இதற்கும் சம்பந்தமில்லை. சாவகச்சேரி தாக்குதலின பின்பு இரண்டுவாரமாக அப்பகுதி மக்கள் நடமாடவும், வியாபாரம் செய்யவும் சாத்தியமான சூழ்நிலைகள் காணப்பட்டன.**

**இத்தாக்குதலின் பின்பு, நமது இயக்கமல்லாதவர்களினால் மன்னாரில் ஒரு இராணுவ ஜீப் தகர்க்கப்பட்டது. அதில் சில இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதன் எதிரொலியாகவே மன்னாரில் அவ்வாறு மக்கள் அழிவதற்கு வாய்ப்பேற்பட்டது.**

**நமது ரயில் தாக்குதலுக்கான திட்டங்கள் கூட, மேற்கூறிய தாக்குதலை நடத்தியவர்களாலேயே நடத்தப்பட்ட சிறுசிறு தாக்குதல்னால் இருதடவை முறியடிக்கப்பட்டு, மூன்றாவது தடவையாகவே நமக்கு அதில் வெற்றி கிடைத்தது, குறிப்பிடத்தக்கது.**

**இலங்கையரசுக்கு அமெரிக்கா, பிரிட்டன், சீனா போன்ற ஏகாதிபத்தியங்கள உதவி வருவது பற்றிய தங்கள் அபிப்பிராயம் என்ன?**

**பிற்போக்குவாதிகள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்திருக்கின்றார்கள்; இது முன்னமே எதிர்பார்த்ததுதான்! இதனை எதிர்பார்த்தே நமது போராட்டத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. நமது ஒவ்வொரு தாக்குதல்களும் இவர்களுக்குச் சவாலாகவே நடந்து வருகின்றன. எனவே இவர்களைப் பற்றி நாம் கவலைப்படவே தேவையில்லை. நாம் மக்கள் சக்தியில் நம்பிக்கை கொண்டுள்ளோம். நிச்சயமாக, மக்கள் சக்திக்கு முன்பு இவர்கள் தோல்வியைத் தழுவப் போவது உறுதி!**

**அண்மையில் நடைபெற்ற 'டொலர்', 'சென்ற்' பண்ணைத் தாக்குதல்கள்; 'கொக்குளாய்', 'நாயாறு' மீனவர் குடும்பங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் பற்றி நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?**

**'டொலர்', 'சென்ற்' பண்ணைகளைப் பொறுத்தவரை, அவை, சிறிலங்கா அரசு தனது இனவாத வெறியில் வேண்டுமென்று உருவாக்கிய குடியிருப்புகள்! அதுவும், இனக் கலவரங்களில் உடமைகளை இழந்து அகதிகளாக வந்து குடியேறிய மலையகமக்களை விரட்டியடித்துவிட்டு, கொலைக் குற்றம் புரிந்த-ஆயுள் சிறைக் கைதிகளான சிங்களக் காடையர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட குடியேற்றங்கள் அவை! எனவே, 'டொலர்', 'சென்ற், பண்ணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதில் தப்பில்லை. இது அந்தக் கொலை வெறி அரசுக்கு ஒரு சவால்.**

**ஆனால், 'கொக்கிளாய்', 'நாயாறு' மீனவக் குடும்பங்கள் மீதான தாக்குல்கள் முற்றிலும் நடத்தப்படடிருக்க வேண்டியவையல்ல! இது நிச்சயமாக கண்டிக்கப்பட வேண்டியதாகும். இத்தாக்குதல்களால் அப்பாவிச் சிங்கள மக்களே பலியாகியுள்ளனர். அத்தோடு தமிழீழ மக்கள் பின்வரும் விளைவுகளையும் எதிர்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர்.**

**1. சிறிலங்கா அரசு, தமிழ் ஈழப்பகுதியில் மென்மேலும் பலத்த பாதுகாப்பு வசதிகளுடன் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தத் திட்டம் தீட்டியுள்ளது.**

**2. பெருமளவு பொலீசும், இராணுவமும் தமிழீழப் பகுதிகளை முற்றுகையிட வழி வகுத்தது.**

**3. எல்லைப்புறச் சிங்கள மக்கள் ஆயுதமயப்படுத்தப்பட்டு அவ்வாயு தங்கள் தற்**

படிப்பகம்

www.padippakam.com

சமயம் தமிழ் மக்களுக்கு எதிராகத் திரும்பிக் கொண்டிருக்கின்றன அல்லது திரும்ப வுள்ளன.

4. நமது போராட்டம் ஒரு குறிப்பிட்ட இனத்துக்கெதிரானதல்ல (சிங்கள மக்களுக்கு)—இனவாத சிறிலங்கா அரசுக்கெதிரானதே என்ற சமுதாய விஞ்ஞான நிலைமை கொச்சப்படுத்தப்பட்டுள்ளது.

5. வெளிநாடுகளில் நமது போராட்டத்திற்கெதிரான பிரச்சாரங்களை சிறிலங்கா அரசு முடுக்கிவிட ஏதுவாகிவிட்டது.

6. 10,000 க்கும் மேற்பட்ட தமிழ்க் குடும்பங்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளன,

7. பல தமிழ்க் கிராமங்கள் இராணுவத்தால் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. இக்கிராமங்கள் வெகுவிரைவில் சிங்களக் கிராமமாக மாறும் வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

இதுவரை இலங்கையில் நடந்து முடிந்த இனக்கலவரங்களில் ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். அவாகளது சொத்துக்கள் சூறையாடப்பட்டுள்ளன. அந்த வேளையில் இப்படியானதொரு தாக்குதல் நடத்தபபட்டிருந்தால் பரவாயில்லை. ஆனால், இப்போது நமது போராட்டம் பரலாக்கபபட வேண்டிய காலகட்டம்: சிங்கள மக்களது பேராதரவுகளை தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு பெற்றெடுக்க வேண்டிய கட்டாயமானவேளை. இந்த வேளையில் இத்தகைய தாக்குதலை நடத்தியவர்கள் நிச்சயமாக இனியாவது நமது போராட்டத்தின் அக, புறக்காரணிகளைப்பற்றிச் சிந்தித்துச் செயற்படவேண்டும்.

**மற்ற இயக்கங்களுக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?**

இது, தமிழ்பேசும் மக்களுக்கு மிகவும் நெருக்கடியான காலகட்டம். நமக்கு மிகவும் பொருத்தமான சர்வதேச சூழ்நிலைகள் உருவாகி வருகின்றன. இதனை எல்லா இயக்கங்களும நன்கு பயன்படுதத வேண்டும். நமது பொது எதிரியை இனங்கண்டு-எதிரியை முறியடிக்கும் பலமான தாக்குதலுக்காக எல்லோரும் அணிதிரள வேண்டும. துப்பாக்கிளை விடுதலைப் போராளிகளுக்கெதிராகத் திருப்புவதை விடுத்து, நமது பொது எதிரியைக் குறிவைக்க வேண்டும் அப்போதுதான் நாம் மக்களிடமிருந்து அந்நியமாகாமல், ஒரு மக்கள் போராட்டத்தின் மூலம் தமிழீழ விடுதலையை வென்றெடுக்க முடியும.

---

நூல் அறிமுகம்

## தமிழர் தேசிய இனச்சிக்கல்

**-எஸ். வி. இராஜதுரை**

தமிழ் ஈழத்தில் மக்கள் சமூகம் இன வெறிததாககுதலுக்கு உள்ளாகி அத்தேசிய இனத்தை அடியோடு அழிக்க சிறிலங்கா அரசும் அதன் இறக்குமதித தந்திரோபாயங்களும் துரிதகதியில் இடங்கிவரும் இவ்வேளை, தமிழ் ஈழ விடுதலைக்காகப் போராடும் இயக்கங்களுககுணடான கொளகைகளில், பேச்சளவில் சிங்களப் பாட்டாளிகளுடன் கரமிணைத்து விடுதலையைப் பெற்றெடுப்பதென இருப்பதையும, தமிழீழ மக்கள் மீது பாய்ந்திருககும் இவ்வாததநின் வரலாற்றையும் அணுகியிருக்கும் ஆசிரியர்.

"........தவறான எண்ணங்களைத் தொடர்ந்து வைத்துக் கொண்டுள்ள தமிழ் ஈழப் போராளிகள் பலர் தொடர்ந்து சிங்கள மக்கள் மனங்களிலே அச்சத்தையும். ஐயத்தையும், அவநம்பிக்கையையு9 உருவாககித் தீரவேண்டியவரும், பரந்துபட்ட தமிழ்மக்களின் நலன்களைக் காப்பதென்பது, சிங்களப்பரந்துபட்ட மக்களின் நலன்களைக் காப்பது என்ற உண்மையுடன் பிணைக்கப்பட்டிருப்பதைக் காணத் தவறுவதற்கு இடடுச் செல்லும்- இன வெறிக்கு இரையாகியுள்ள சிங்கள மக்களை அதிலிருந்து விடுவித்து, ஏகாதிபத்தியத்தின் புதுக்காலனிச் சுரண்டலுக்குடபடுத்தப்பட்ட இலங்கையின் விடுதலைக்கு அவர்களோடு தோளோடு தோள்நின்று போராடுவதற்கான வாய்ப்பை அகற்றிவிடும்; அல்லது, நீண்ட காலத்திற்கு ஒததிவைத்துவ்டும். இதன் பொருள் தமிழ் ஈழப் போராளிகள் இபபோதைய கோரிககைகளே கைவிட்டுவிட வேண்டுமென்பதல்ல; மாறாக, அவர்களது கோரிக்கையானது சிங்கள மக்களின் விடுதலையுடன் பின்னிப் பிணைக்கப்பட்டிருக்கின்றது என்பதை உணர்வதாகும்."

எனக்குறிப்பிடுவதானது தமிழ் ஈழப் போராளிகளையும், ஈழப்பிரச்சினையில் அக்கறை கொண்டவர்களையும் நிமிர்ந்து பார்க்க வைக்கும். இந்நூலின் வரவு, காலத்திற்கேற்றதாக அமைந்ததில் இதன் பயன், இந்நூல்ன் கருத்திற்கேற்ப செயலாக்கத்தையே பொறுத்தது.

**கிடைக்குமிடம்:-**

Cre—A,
268, Royapettiah High Road,
MadraS-600 014,
Price— Rs. 3

படிப்பகம்

www.padippakam.com



# வலுவிழந்து போன வட்டமேசை மாநாடு!

இலங்கையில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப் பட்டு வருகின்ற அடக்குமுறைகள் தொடர்வது தவிர்க்கப்படல் வேண்டும், அந்த இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு முன் வைக்கப்பட வேண்டும் என்ற நிர்ப்பந்தம் நெருங்கி வந்த போது, ஸ்ரீலங்கா அரசானது "வட்டமேசை மாநாட்டைக் கூட்டி ஆராய்வது" என்ற போலிக் கூத்துக்கு தயாரானது நினைவிருக்கலாம், ஆனால் இந்த வட்ட மேசை மாநாடு அல்லது அனைத்துக் கட்சி மாநாடு (Round Table Conference or All Party Confereuce) ஆனது, தமிழ பேசும மக்கள் — தாம் எதிர்பார்த்ததைப் போலவே சப்பென்று ஆகி விட்டதிலும் வியப்பெதுவுமில்லை.

தமிழ் பேசும் மக்கள் என்ற தேசிய இனம், ஸ்ரீலங்கா அரசின் சர்வாதிகார, தரகு முதலாளித்துவ ஆட்சியின்கீழ் — அதாவது ஜனநாயகத்தை மதிக்காத ஓர் ஆட்சிமுறையின்கீழ் இனிமேலும் உழலத் தயாராக இல்லை என்ற நிலைமைதான் "தமக்கெனத் தனிநாடு தேவை' என்ற நியாயமான வழிக்கு இட்டுச் சென்றது. இதே வேளை தமிழ்ப்பெரும் தலைவர்கள என்று தம்மைக் கருதிக் கொண்டவர்களின் நிலையையும் கூறி வைப்பது பொருத்தமாக இருக்கும். 1948ல் தேசியக்கொடி மாற்றம் நடைபெற்று பிரிட்டிஸ் ஆட்சியிலிருந்து இலங்கைத் தீவு சுதந்திரம் அடைந்தது. எனவே இலங்கைத் தீவில் வாழும் அனைத்து மக்களும் அந்த சுதந்திரத்தில் பங்குடையவர்கள்தான்! ஆனால் அதன் பின்னர் ஏற்பட்ட ஆட்சி முறையைப் பார்த்தால் இது வாய்ப் பேச்சுக்கு மட்டும் தான். பெருமபான்மை சிங்கள மக்களின், தலைவர்களிடம் ஆடசிப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட போதே தமிழ் பேசுகின்ற மக்களுக்கு எதிரான ஒடுக்கு முறை என்பது தீர்மானிக்கப் பட்டு விட்டதால், தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள், பாராளுமன்றத்தின் நாற்காலிகளைச் சூடேற்றியதுடன் சிங்கள மக்கள் தலைவர்களின் முடிவுகட்கு தலையசைத்தும் வந்தனர்.

இதே நிலைமை நீடித்து வந்ததன் விளைவாகத்தான், மக்கள் தங்களை ஒதுக்கி விடுவார்களோ என்ற பயம் உருவாகி, தனிநாட்டுக் கோரிக்கையை வாயளவில் முன் வைத்தனர் தமிழ்த் தலைவர்கள், அது கோரிக்கையாகவே இருந்து வர தமிழர் பிரதேசங்களில் அரச எதிர்ப்புகள் பாரிய அளவில் உருவெடுத்த போது, வட்டமேசை மாநாட்டைக் கூட்டுவது — இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது என்று அரசு தயாரானதற்கு, தமிழ் தலைவர்களின் தலையசைப்பில் மாற்றம் ஏற்பட்டதில்லை.

ஆயிற்று, வட்டமேசை மாநாடு கூட்டப் பட்டது ஸ்ரீலங்கா அரசின் ஜனாதிபதியின் தலைமையின் கீழ் கூடிய இந்த மாநாட்டுககு அரச பா. ம. உறுப்பினர்கள், மந்திரிகள், பௌத்த மதகுருமார், கிறிஸ்தவ பாதிரியார் ஆகியோருடன தமிழ தலைவர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். ஆனால் இந்த மாநாட்டில் ஏற்றுக் கொள்ளபபடும் தீர்வை தமிழ் பேசும் மக்கள் முழுமையாக எற்றுக் கொள்ளும் நிலையில் இருககிறார்களா? இந்தத் தீர்வு அவர்கட்குப் பொருந்துமா என்பதை அரசாங்கமோ, தமிழ்த் தலைவர்களோ சிந்திக்க மறுத்து விட்டனர்.

ஒரு புறம் மாநாடு, பிரச்சினைகளை ஆராய்ந்து கொண்டிருக்க், மறுபுறமாக அதே பிரச்சினைகள் பயங்கரமாக உருவெடுத்துக் கொண்டிருந்தன என்றால் மாநாட்டின் சிறப்பைப் பார்க்க வேண்டியதுதான்! ஆமாம், தமிழ் பேசும் மக்களுக்கெதிரான கொடுமைகள், சிறிலங்கா அரச கூலிப்படைகளால் படு கேவலமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வந்த காலகட்டம் இந்த மாநாட்டுக் காலகட்டம்தான்.

வட்டமேசை மாநாடு ஆரம்பித்ததிலிருந்து கூடுதல் நாட்களில் உருப்படியான பிரச்சினை எதுவும் ஆராயப்பட்டதிலலை. ஏதாவது ஒரு பிரச்சினை சுமுகமாகும் போது ஒன்றில் பௌத்த மதகுருமார் எதிர்பபர் அல்லது அரச மந்திரிகள எதிர்ப்பர்! எனவே அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு எதுவும் காணப்படுவது கிடையாது. இதே குததுவெட்டுக்கள்தான் மாநாடடின் இறுதிவரை தொடர்ந்தன. ஜனாதிபதிககு நினைவு வந்தால் மாநாடடைக் கூடடுவார். இல்லாவிட்டால் காலம் கடத்துவார், இதற்காக தமிழ் அரசியல் தலைவர்கள் அலைந்த அலைச்சல்களும ஏராளம், இடையிலே பௌத்த பிககுகட்கு புதிய யோசனையும் பிறந்தது. தமிழ் பேசும் மக்களது போராட்டத்திற்கு எதிராக பௌத்த தர்மததையும் மீறி, சிங்களமககள் (மதகுருமார் உடபட) ஆயுதம தூககியாக வேண்டும என்று அறை கூவல் விடுத்தனர், ஆனால தமிழ பேசும் மக்களது போராட்டத் தன்மை, சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல, மாறாக சிறிலங்கா தரகு முதலாளித்துவ அதன பின்னணி ஏகாதிபத்தியங்களுக்கே எதிரானது என்பதை

www.padippakam.com



அவர்கள் உணர்ந்தாலும் ஏற்றுக் கொள்வதற்கில்லை, அல்லது இவ்வாறான கருத்துக்களை சிங்கள மக்கள் உணர்ந்து கொள்வதை இவர்கள் விரும்புவதில்லை.

பல்வேறுமட்ட முரண்பாடுகளின் நடுவே மாதக் கணக்காக கூடி ஆராய்ந்து, இனப் பிரச்சினைக்கான தீர்வு ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்டது. இதன்படி "மாவட்டக் சவுன்சில்களும்'' அமைக்கப்படும், மாநிலக் கவுன்சிலானது பாராளுமன்றத்தின் இரண்டாவது சபையாக, பாராளுமன்றத்தின் பதவிக் காலத்தையொட்டி, அதிகளவு அதிகாரம் கொண்டதாக 75 உறுப்பினர்களுடன் அமைக்கப்படும், இதில் 50 பேர், மாவட்ட, மாகாணக் கவுன்சில்களின் தலைவர்களாகவும் துணைத் தலைவர்களாகவும் இருப்பர். முக்கிய உறுப்பினர்களாக 7 பேர் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுவர். 9 மாகாணங்களிலுமிருந்து 18 பேர் ''மாகாணப் பிரதிநிதி'' களாகத் தெரியப்படுவர். இக்கவுன்சிலானது 3 நிரந்தரக் கமிட்டிகளைக் கொண்டிருக்கும்.

(1), மாகாணங்கள், மாவட்டங்களுக்கிடையிலான விவகாரங்கள் பற்றி ஆராயும் கமிட்டி.

(ii) தேசிய ஒற்றுமையையும் அமைதியையும் கவனிக்கும் கமிட்டி.

(iii) சமூக பொருளாதார நிலைமைகளைக் கவனிக்கும் கமிட்டி.

இவ்வாறாக இனப்பிரச்சினைக்கு, ஜனாதிபதி தீர்வை முன்வைத்தபோது, அதை முதன் முதலாக எதிர்த்தவர், கைத்தொழில் விஞ்ஞானத்துறை அமைச்சர் ''சிறில மாதயூ'' ஆவார். இவ்வாறான தீர்வின் மூலம் சிங்கள மக்களுக்கு எதிராக, தமிழ் பேசும் மக்களுக்கு தனி நாட்டை வழங்கியது போலாகும் என்றார் அவர், ஆனால் அடுத்தகணம் அவரது மந்திரிப் பதவி பறிபோனதை எவரும் எதிர்பார்த்திருக்கவில்லை. அதோடு இன்னுமொரு வியப்பு என்னவென்றால் இவ்வளவு காலமும் நாற்காலியைச் சூடேற்றி, அரச தீர்வுகட்குத் தலையசைத்து வந்த தமிழ் அரசியல் தலைவர்கள், இனப்பிரச்சினைக்கான இந்தத் தீர்வை மறுத்து விட்டனர்.

எனவே ஸ்ரீலங்கா அரசானது, சர்வதேச நாடுகளின் கேள்விகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய இந்தக் கட்டத்தில தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டு, தீவிரவாத இயக்கங்கள் தலைவர்களுடன் பேச்சு வார்த்தைக்கு உடன்பட வேண்டும் என மனப்பால் குடிக்கிறது.

ஏகாதிபத்தியத்தின் பின்னணியை வலுவாக வைத்துக் கொண்டு, தமிழர் பிரதேசங்களில் ஆயுதம் தாங்கிய சிங்கள மக்களை (இனவெறியூட்டப்பட்ட குண்டர்கள் என்று கூறுவதே பொருந்தும்) குடியேற்றுவதன் மூலம் இன்னுமோர் 'இஸ்ரேல்' உருவாவதை ஒருபோதும் தமிழ் பேசும் மக்கள் அனுமதிக்கப் போவதில்லை! அரசியல் பொருளாதார ரீதியாக தமக்கு ஏற்பட்டு வரும் ஒடுக்கு முறைகளிலிருந்து முற்று முழுதான விடுதலை பெற ஆயுதம் தாங்கிய மக்கள் எழுச்சிப் போராட்டம் தான் ஒரே வழியென்பதை வரலாறு தந்த பாடங்கள் மூலம் தமிழ் பேசும் மக்கள் உணர்ந்து, போராட ஆரம்பித்து விட்ட பின்னரும் பேச்சு வார்த்தையாவது மண்ணாங் கட்டியாவது!

ஆமாம்! பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினை தீர்க்கலாமென்பது நல்லயோசனை தான். ஆனால் அது தறசமயம் நடைமுறைச் சாத்தியமில்லை. ஏனெனில் நமது எதிரி, சர்வதேசப் பயங்கரவாதிகளினால் பலப்படுத்தப்பட்டு உயர் ஸ்தானத்தில் இருக்கின்றார். இதனால்தான் நாம் அவருடன் கதைப்பவை எடுபடுவதில்லை. அத்தோடு, அவர் எடுப்பதெல்லாம கண் மூடித்தனமான அராஜக இராணுவ நடவடிக்கைகள்! இவருடன், இவரது இந்த ஸ்தானத்தில் வைத்து நாம கதைக்க வேண்டிய கட்டாயமுமில்லை; கதைப்பதால் பிரயோசனமும் இல்லை.

எனவே, நமது எதிரியைத் தட்டி இறக்க வேண்டும். இவர் சாதாரண நிலைக்கு வர வேண்டும்; சர்வதேச பயங்கரவாதிகள் கைவிரித்துக் கொண்டு ஓட்டமெடுக்க வேண்டும்; அதன்பின்புதான் நமக்கும் அரசுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் சாத்தியமாகும்; எடுக்கும் முடிவுகளும நிரந்தரமானதாக, மனப்பூர்வமானதாக, நடைமுறைச் சாத்தியமுள்ளதாக இருக்கும். இதற்காகவே நமது போராட்ட வடிவங்கள செம்மைப் படுத்தப்பட்டுள்ளன.

---


*பீரங்கிகளைக் கண்டும் மரணத்தைக் கண்டும் சாதாரண மனிதர்களும் கோழைகளுமே அஞ்சுவார்கள் சுதந்திர இலட்சியத்தை அடையும் நோக்கத்துடன் மரணத்தைப் பார்த்துச் சிரிக்கும் சிலர்களை அச்சுறுத்தும் சக்தி அகிலத்தில் யாருக்குமேயில்லை.*

— வீர சவர்க்கார்.

படிப்பகம்

www.padippakam.com





மாணவர் சக்திகளின் புதிய உதயம்

# தமிழ் மாணவர் அமைப்பு

தமிழ் ஈழ தேசிய விடுதலைப் போராட்
டம் கூர்மைப்படடுவரும் இவ் வேளை புத்தி
ஜீவிகளாக வளர்க்கப்பட்டுவரும் மாணவ
சத்திகள் புத்தகங்களுடன் போராடிக்
கொண்டும், கலாச்சாரப்பாதிப்புக்களால்
சீரழிந்தும் தமது உரிமைகளுக்காகப்
போராடும் குணமற்றுப் போகின்றார்கள்.
சர்வதேச ரீதியாக மக்களுக்கு ஏற்படும்
ஒடுக்குமுறைகளை எதிர்த்துக் குரலெழுப்ப
வேண்டியவர்கள், நாளைய நாட்டின்
நடாத்துனர்களான மாணவர்களே! இச்சக்
திகள் பிரிக்கப்படுவதாலும், மத்தியதர
வர்க்கத்தின் நழுவல்காரணமாகவும் பிரச்
சினைகளிலிருந்து விடுபடும போக்குடைய
வர்களாகவும் இருக்கின்றார்கள். எனவே
இத்தகைய மாபெரும் சக்திகளை ஒன்றி
ணைத்து—அரசியல் மயப்படுத்தி போர்க்
கோலம் பூணவைக்கும் முகமாகவே 'தமிழ்
மாணவர் அமைப்பு' (Organization of
Tamil Students) ஆனது தமிழீழ விடுதலை
இயக்கத்தால் ஆரம்பிக்கப் பட்டது.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்
கெதிராக சிறிலங்கா அரச இராணுவத்தின்
முற்றுகையும், தமிழ் தேசிய இனத்தைப்
பூண்டோடு அழித்துவிட வேண்டுமென்று
அரசு எடுத்து வரும் முயற்சியும் சிறிலங்கா
இராணுவக்கெடுபிடிகளில் அகப்பட்டு தமிழ்
மீனவக் குடும்பங்கள் தொழில் செய்ய முடி
யாமல் திண்டாடுவதும், படுகொலை செய்
யப்படுவதும் அட்டூழியத்தின் மொத்த
உருவங்கள்!

தார்மீக முலாம் பூசி, 'தம்மபத்த' கோஷ
மெழுப்பி கொலை செய்துவரும் சிறிலங்கா
அரசு, தனது 37வது சுதந்திர தினத்தை
வெகு கோலாகலமாக நடத்தத் திட்டமிட்டு
தமிழ் பேசும் மக்கள் வீடுகளில் அடக்கு
முறைமூலம் தேசியக் கொடியேற்றி, அவர்
களது பெருமூச்சில் பறக்கவிடக் கட்டளை
யிட்டது. இம்மனித விரோத செயலுக்கு
எதிராக சிறிலங்கா 'அராஜக அரசசைக்
கண்டித்து 'தமிழ் மாணவர் அமைப்பு'
தனது ஆரம்பப் போராட்டமாக, அனைத்
துக் கல்லூரி மாணவர்களையும் உள்ள
டக்கி, மாபெரும் ஊர்வலம் ஒன்றை
நடத்தியது.

தனது போராட்டைப்பாதையில் அடிவைத்
திருக்கும் இவ்வமைப்பு, 'தீச்சுடர்' என்ற

படிப்பகம்

www.padippakam.com



மாதசஞ்சிகையையும் வெளியிடத் திட்டமிட்டுள்ளது. இன்று தமிழீழ விடுதலைக்காகப் போராடுகின்ற இயக்கங்களின் மாறுபட்ட போக்குகளை விமர்சிப்பதன் மூலமும், இயக்கங்கள் அவற்றின் தனித்தன்மையைக் கைவிடுவதன் மூலமும் விடுதலையை விரைவில் அணுகுவதற்காக இயக்கங்களின் ஒற்றுமையை 'தீச்சுடர்' வலியுறுத்தும்.

இன்று, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) ஈழப்புரட்சி அமைப்பு (EROS), தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (TELO) என்பன ஒன்றுடனொன்று கரமிணைத்து முக்கூட்டணியொன்றை உருவாக்கியுள்ளன. இது சிறந்த வேலைத் திட்டங்களை வகுத்து, ஏனைய இயக்கங்களையும் ஒன்றிணைத்துப் போராடுவதன் மூலமே சிறிலங்கா அரச இயந்திரத்தைத் தூக்கியெறிய முடியுமென்பதில் 'தமிழ் மாணவர் அமைப்பு' அசையாத நம்பிக்கை கொண்டுள்ளது. அவ்வாறான போராட்டத்தின் மூலம்தான் முற்றுகையிட்டிருக்கும் அரச துருப்புகளைப் பின்வாங்கச் செய்ய முடியும். இக்கருத்துக்களைச் செயல்வடிவமாக்க இவ்வமைப்பு, தமது முழுமையான பங்களிப்பை வழங்கும். அதேபோல் இந்த நியாயமான போராட்டத்தைச் சர்வதேச ரீதியில் பிரச்சாரப்படுத்தி, ஆதரவைப் பெறுவதில் 'தீச்சுடர்' இன்வருகை பெரிதும் உதவும்.

இதேவேளை, தமிழகமக்களும், மக்களை வழிநடத்தும் தலைவர்களும், அரசியற்கட்சிகளும் இப்போராட்டத்திற்கு ஒருமுகப்பட்டு ஆதரவு வழங்க வேண்டும். ஒரு தேசிய இனம் நாளாந்தம் துன்புறுத்தப்பட்டுப் படுகொலைக்குள்ளாக்கப் படுவதை உலகறியச் செய்து, உலகெங்குமுள்ள சத்தியத்தின் சக்திகளை (ஜனநாயக மனிதநேய சக்திகள்)த் தட்டியெழுப்ப வேண்டும். நேசமுரண்பாடுகளைத் தீர்த்து, தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்காகக் கரமுயர்த்த வேண்டும் என்பது இம்மாணவ சத்தியின் எதிர்பார்ப்புக்களும், நடவடிக்கைகளுமாகும்.

ஸ்ரீலங்கா அரசும், அரச முதலாளிகளும் தமது இருப்பை ஸ்திரப்படுத்திக் கொள்ளும் நோக்குடன் பொருளாதார விழுக்காட்டை மக்கள் அறியாவண்ணம் பூசி மெழுகி, இனவாதப்போர் வெறியூட்டி, இன்று சிங்களப் பொதுமக்களும் ஆயுதமாயப்படுத்தப்படுமளவுக்கு வந்து விட்டது. தமது சுரண்டலை எதிர்நோக்கியிருக்கும் ஏகாதிபத்தியத்தியங்களான அமெரிக்கா, பிரிட்டன் ஆகியவற்றிடமிருந்தும், சர்வதேச பயங்கரவாதிகளான ஸ்ரேலிய 'மொஸாத்' போன்றவற்றிடமிருந்தும் நவீனரக ஆயுதங்களையும், போர்முறை யுக்திகளையும் பெற்று ஈழத்தையும்,இந்தியாவையும் — ஏன்? இந்து சமுத்திரப் பிராந்தியத்தையே நோக்கிக் கோர முகம் காட்டி நிற்கின்றது ஸ்ரீலங்கா அரசு!

இந்த வேளையில் தான் கூட்டுச்சேரா நாடுகளின் தலைமையை ஏற்று- உலகநாடுகளை தம் உலகமகாயுத்தத் தயாரிப்புக்களில் இருந்து ஓரளவுக்கேனும் விலக்கி வைத்திருந்த — சமாதான வெண்புறாவான பாரத தலைவியின் படுகொலை இடம் பெற்றது. ஈழமக்களுக்காகக் குரல் கொடுத்த அந்தத் தலைவி, உலகஎதிரியான அமெரிக்காவின் ஏவல் நாய்களான C. I. A குழுவினரின் சூழ்ச்சியால் படுகொலை செய்யப்பட்டு விட்ட இழப்பில் துயருற்றிருக்கும் இந்திய மக்களின் ஆதரவு, ஈழத்தில அன்றாடம் இரத்தத்தில் தத்தளிக்கும் தமிழ்பேசும் மக்களுக்கு என்று முண்டு என்ற நம்பிக்கையுடன் மாணவர்களின் போராட்டம் தொடரும்.

---

# தரப்படுத்தலின் புதிய வடிவம்

உயர்கல்வி விவகாரங்களுக்குப் பொறுப்பான வரும், இலங்கை ஜனாதிபதியுமான ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் பல்கலைக்கழகத் தேர்வின் புதிய நடைமுறையை 30-01-85 இலங்கை வானொலியில் மாலை 6. 15 செய்தியில் கூறப்பட்டது.

புதிய தேர்வு முறையின்படி, மாவட்டமொன்றிற்கு,

திறமை அடிப்படையில் — 30%
சனத்தொகை அடிப்படையில் — 65%
பின்தங்கிய பகுதி அடிப்படை — 05%

இப்பின்தங்கிய பகுதி அடிப்படையின், தமிழ் பேசும் மக்கள் வாழும்பகுதிகளான மன்னாரும், அம்பாறையும் தான் அடங்குகின்றன அம்பாறைக்குக் கொடுக்கப்பட்ட இத்தகைய சலுகை கூட முழுமையாகத் தமிழ் பேசும் மாணவர்களுக்குப் பயன்படப் போவதல்ல என்பது தெரிந்ததே!

இதற்கு முனபு கொண்டு வரப்பட்ட தேர்வு முறையின்படி மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய தமிழ்மாவட்டங்கள் பின்தங்கிய மாவட்டங்களாகக் கருதப்பட்டு, அப்பகுதி வாழ் மாணவர்களின் பல்கலைக்கழக நுழைவுக்கு வழிவகுத்து வந்தது.

இந்த நுழைவுவழி கூட தற்சமயம் மிக நெருக்கமாக அடைக்கப்பட்டுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



# இன்னுமொரு இஸ்ரேலுக்கான தயாரிப்பு ஈழ மண்ணிலே....

இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்கள்
மீதான ஒடுக்குமுறை தேசியத்தன்மை வாய்ந்
தது. எம்மைத் தேசிய இனமென ஏற்றுக்
கொள்வதனை சிறிலங்கா அரசு மறுப்பதன்
மூலமே, நமது சுயநிர்ணய உரிமை பற்றிக்
கவனிக்காமல் தொடர்ந்து ஒடுக்கு முறைக்
குள்ளாக்க முடியும். அந்தகைய நடவடிக்கை
களிலேயே முனைந்து நின்ற சிறிலங்கா அரசு
தற்சமயம், தாம் கைக்கொண்ட செயலின்
விளைவாக ஒரு உள்நாட்டு யுத்தத்தையே
முகம் கொடுகக வேண்டிய நிர்ப்பந்தத்தில்
நின்று கொண்டிருக்கின்றது.

ஒரு தேசிய இனம், தாம் பிரிந்து வாழ்
வதற்கு — சுயமாக வாழ்வதற்கு உரிமை
கொண்டுள்ளது. அதாவது சுயநிர்ணய
உரிமை கொண்டுள்ளது. எங்களது இத்
தகைய உரிமையின் நிமித்தமே, நாம் தனி
நாடு கோருகின்றோம்.

நமது கோரிக்கையை முடமாக்குவதற்கு
அரசு எடுக்கின்ற ஆயுதம் தான் தேசிய
ஒடுக்குமுறை! இதன் மூலம் நம்மைத்
தொடர்ந்தேர்ச்சியாக ஒரே நிலப்பரப்பில்
வாழவிடாமல் தடுக்க முயல்வது அரசின்
முக்கிய நோக்கங்களிலொன்று இதற்காகவே
சிறிலங்கா அரசு, நமது பாரம்பரிய தமிழ்
பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை
ஏற்படுத்திக்கொண்டு வருகின்றது.

இப்போது, இலங்கையரசு எதிர்நோக்கி
யிருக்கும் உள்நாட்டு யுத்தத்திற்கான அடிப்
படைக் காரணத்தை ஆராயும் போது அதில்
குடியேற்றவாதம் முக்கிய இடமொன்றை
வகிப்பது புலனாகும் நிலைமை மிகவும் சிக்
கல் நிறைந்து கொண்டு தற்சமயம் பூதாகார
மாக உருவெடுத்துக் கொண்டிருக்கும்போது
அத்தகைய சிககல்களைத் தீர்தது வைக்கும்
பொருட்டு, அதன் அடிப்படைக் காரணங்
களை ஆராய்ந்து — அவை மென் மேலும்
தொடராமல் இருக்க வழிவகுத்தலின் மூல
மாகத்தான் பிரச்சினையைத் தீர்த்து வைககு
லாமென்பது நிதர்சனம்! அதை விடுத்து, தற்
போது இலங்கையரசு எடுத்திருக்கும் புதிய
நடவடிக்கைகளைப் பார்ப்போம்!

"தமிழ் மக்கள் செறிவாக வாழும் பகுதி
யில் சிங்கள மக்களைக் குடியேற்றுவதன்
மூலமாகத்தான், பயங்கர வாதத்தை முறி
யடிக்க முடியும்,"

எந்தெந்தக் காரணங்களால் அரசுக்
கெதிரான இத்தகைய உள்நாட்டு அச்சுறுத்
தல்கள் ஏற்பட்டனவோ, அவற்றையே
தொடர்ந்து கடைப்பிடிப்பதன் மூலம் இத்
தகைய அச்சுறுத்தல்களிலிருந்து மீளலா
மென்று கனவு காண்கின்றது இலங்கையரசு!

அரசின் இத்தகைய இனவாதக் குடியேற்
றங்கள் மூலம், நமது பறிக்கப்பட்ட பாரம
பரிய பிரதேசங்களை ஒரு தடவை ஞாபகத்
துக்குக் கொண்டு வருவோம்.

1958ம் ஆண்டு தமிழ்பேசும் மக்களுக்
கெதிராக நடைபெற்ற இனக்கலவரத்தின்
பிறகே, தமிழ்பேசும் மக்கள் சிறிலங்கா அரசு
மீது கொண்டிருந்த நம்பிக்கைகளைக் கை
கழுவி விட்டனர். தமககிழைக்கப்படும்
கொடுமைகளுக்குத் தாங்களே தீர்வு தேடிக்
கொள்ள வேண்டுமெனச் சபதமெடுத்தனர்.

இவ்வேளையில், தமது சுயநிர்ணய
உரிமையொன்றே அரசுடன் வாதாடுவதற்கு
இருந்தது. அதாவது, தாம் ஒரு தேசிய
இனம் எனக்குறிப்பிட்டு, தமது உரிமை
களைப் பெற்றுக் கொள்ள அரசுடன் பேச்சு
வார்த்தைகளில் ஈடுபட்டனர். தமது தேசிய
இன அந்தஸ்து பறிக்கப்பட்டுவிடக் கூடாதே
யென்பதற்காக, தங்களது பாரம்பரிய பிர
தேசங்களில் தமிழ் மக்கள் கவனம் செலுத்த
லாயினர்

பிரதமர் டி. எஸ். சேனநாயகாவினால்
கொண்டு வரப்பட்ட 'காணிக்கொள்கை'
யே, நமது பாரம்பரிய பிரதேசங்கள் பறிக்
கப்படுவதற்கு அத்திவாரமிட்டது 1950ம்
ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கல்லோயாத்
திட்டம், கிழக்கு மாகாணத்தில் பெருமளவு
சிங்களக் குடியேற்றங்கள் திணிக்கப்படு
ற்வதத ஏதுவாயிற்று. இக்குடியேற்றத்தை
யடுத்து, 'பட்டிப்பழை' என விருந்த தமிழ்க்
கிராமம், 'அம்பாறை' என்ற பெயரில் சிங்க
ளக் கிராமமாக மாற்றப்பட்டது.

கல்லோயாத் திட்டத்தைத் தொடர்ந்து,
'அல்லை', 'கந்தளாய்' குடியேற்றங்கள்
தொடங்கப்பட்டன. இதன் மூலம் திரு
கோணமலைப் பகுதியில் சிங்களக் குடியேற
றங்கள் உருவாக வழிவகுக்கப்பட்டன.
'பறையனாறு' என்ற பெயரில் இருந்த
தமிழ்ப்பிரதேசம், 'பதவியாத்திட்டம்' என்ற
பெயரில் சிங்களமயமாக்கப்பட்டது இதுவே
இதுவரை கொண்டுவரப்பட்ட அனைத்துக்
குடியேற்றங்களிலும் கொடுமையானது.

முன் அட்டை விளக்கம்:

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின்
கோரப் பார்வையில் தமிழ் ஈழம்.

படிப்பகம்

www.padippakam.com



இக்குடியேற்றங்கள் மூலம், பின்வரும்
நிகழ்வுகளை அரசு எதிர்பார்த்தது.
1. வடக்கு, கிழக்கு மாகாணத் தமிழ்
பேசும் மக்களை நிலரீதியாக ஒன்றிணையா
மல் தடுத்தல். அதாவது, இம்மாகாணங்
களுக்கு இடைப்பகுதியில் சிங்களக் குடியேற்
றங்களை மேற்கொள்ளுவதன் மூலம், தமிழ்
பேசும் மக்கள் வடக்கு, கிழக்கில் தொடர்ச்சி
யாக வாழவில்லை — என்பதை நியாயப்
படுத்தவே இந்த நடவடிக்கையாகும்.
2. தமிழ் மக்களை தமது பாரம்பரிய பிர
தேசங்களில சிறுபான்மை இனமாக்கல்.
3. தமிழ் பேசும் மக்களை பலமற்ற இனச
குழுவாக்கல்.

இவையனைத்தும் நிறைவேற்றப்படும்
பட்சத்தில் நாம் நமது பாரம்பரிய பிரதேசங்
களாக வடக்கு, கிழக்கு, மாகாணப் பிர
தேசங்களைத் தனியே பிரித்தெடுக்கக் கோரிக்
கை வைக்க முடியாது: கோரிக்கை வைத்
தாலும், நாம் பலமாக அரசை வாதாடி
நமது கோரிக்கைகளில் வெற்றிபெறுமள
வுக்கு நாம் பலம் பொருந்தியவர்களாக
இருக்க மாட்டோம். நமது கலாச்சாரங்கள்,
பொருளாதாரங்கள், உற்பத்தி உறவுகள்
என்பன மாற்றமடைந்து அல்லது, கலப்
படைந்து, இறுதியில் நாம் ஒரு தேசிய இனம்
இல்லை என்று முத்திரை குத்தப்படுவதற்கு
ஆளாவோம்.

ஆனால், இவற்றையெல்லாம் மீறி,
இன்று தமிழ்பேசும் இனம் போராட்டத்தில்
குதித்து விட்டது. எனினும், இத்தகைய
நடவடிக்கைகளிலிருந்து சிறிலங்கா அரசு
மாறியதாகத் தெரியவில்லை
தமிழ் மக்களின் சுயமான குழுக்கள்,
தரிசாகக்கிடக்கும் அரச நிலங்களில் குடி

யேறும்போது, அரசு அவற்றை முறியடிக்
கத் தவறவில்லை.

இக்குடியேற்றங்களின் முடிவாக, தீ
வாவி, சேருவாவில, திரியாய் போன்ற புனித
நகரத்திட்டங்களும்; சொக்கிளாய், புல்மோட்
குடா, நாயாறு போன்ற மீனவக் குடியேற்
றங்களும் சிங்கள மக்களை உள்ளடக்கி,
தமிழரின் பாரம்பரிய பிரதேசங்களைச்
சுவீகரித்துக் கொண்டன. மன்னாரில், அரச
முந்திரிக் கூட்டுத்தாபனத் திட்டமென்ற
பேரில் சிங்களக் குடியேற்றங்கள் மேற்
கொள்ளப்பட்டன மன்னாரில் உள்ள
'கொண்டச்சி' எனும் தமிழ்க் கிராமம் இப்
போது சிங்களக்கிராமமாக மாறியுள்ளது.
கிழக்குமாகாணப் பகுதியில, அண்மை
யில் நடந்த குடியேற்றங்களில் 'வட முனை'
யில் நடைபெற்றது குறிப்பிடத்தக்க தொன்
றாகும் இங்கு, பௌத்தமத நிறுவனங்
களின் துணையுடன் இக்குடியேற்றத் திட்
டங்கள் மேற்கொளளப்பட்டன. அரச
வாகனங்களில் பல்லாயிரக்கணக்கான சிங்
களக் குடும்பங்கள் கொண்டுவரப்பட்டுக்
குடியேற்றப்பட்டனர் இதற்குப் பாதுகாப்
பளிக்க அரச இராணுவமும், பொலிசும்
கடமையிலீடுபட்டன, இந்த அடிப்படை
யிலேயே கிழக்கின் பல பகுதிகளில் குடியேற்
றத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.
இவர்களை வெளியேறும்படி ஜனாதிபதி
உத்திரவிடும், இவர்கள் வெளியேற
வில்லை. "மதநிறுவனங்களின் பூரண பாது
காப்புடன் இருக்கும் இவர்களை வெளி
யேற்ற வேண்டுமென விடுக்கும் கோரிக்கைக்
குச் சட்டபலம் இல்லை" எனப் புதிய சட்
டங்கள் கொண்டுவரப்பட்டு, அக்குடியேற்
றங்கள் நியாயப்படுத்தப்பட்டன.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

இதன்பின்னர் அரசினால், அரச கூலிப்
படைகளைக் கொண்டு தூண்டிவிடப்பட்ட
இனக்கலவரங்கள் 1977, 1978, 1979, 1980
1981, 1982, 1983, 1984 இலும் நீடித்து
1985 இலும் பயங்கரமாகத் தொடர்ந்து
கொண்டிருக்கின்றன. இதனிடையே
1984 இல் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண
வென்று கூட்டப்பட்ட வட்ட மேசை
மாநாடு அப்போவென்று போய்விட்ட
நிலையில் தமிழ் தலைவர்கள் அரசியல்
இலாபம் தேட முற்படுகின்றனர்.

இந்த நிலையில் தமிழ் பேசும் மக்கள்
தாமாகவே தமது முழுமையான விடிவுக்கா
கப் போராட முற்பட்டு சர்வதேச ஆதரவை
யும் உதவிகளையும் வலுப்படுத்தி வரும்
இந்த வேளையில், சிறிலங்கா அரசானது
தான் பொருளாதாரத்தில் படு பயங்கரமாக
வீழ்ச்சியடைவது மட்டுமல்லாமல் அதை

சிங்கள மக்கள் உணர முடியாதவாறு ஏகாதி
பத்திய வலை போட்டு மடைக்கப் பார்க்
கிறது இதற்கு ஆதாரமாக, சிறிலங்கா அரசி
னால் 1962ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட
வரவு செலவுத் திட்டத்தினால் வீழ்ச்சியுற்ற
மக்களது வாழ்க்கைத்தரத்தைத் தொடர்ந்து
தொழிலாளர் மத்தியில் உருவெடுத்த அரசுக்
கெதிரான தொழிலாளர் வேலை நிறுத்த
ங்கள், இலங்கைப் பாட்டாளி வர்க்கத்தி
வர்க்கக் குணாம்சத்தைத் தெளிவு ப
நின்றன. ஆனால் இப்போது நிலை
டுள்ள பொருளாதார வீழ்ச்சியிலும்
கைய சக்திகள் உறங்கிக் கிடப்பது
ணந்தான் என்ன?

ஆனால் அனைத்து மக்க
ளைந்த, உணர்ச்சிமிக்க
சக்திக்கு முன் இந்த ஏகாதிப
பின்னல் எல்லாம் தூசுதான்
வரலாறு காட்டி நிற்கும் உண்

படிப்பகம்

www.padippakam.com

மேலும், இக்குடியேற்றத் திட்டங்களில் அனேகமானவை 'விவசாயத்தைப் பெருக்கும் நோக்கு' என்ற பெயரில் நடத்தப்பட்டிருக்கின்றன. அனேகமாக இக்குடியேற்றங்கள் வெறுமனே இனரீதியான புறக்கணிப்புகளுடன் நடந்ததெனக் காட்டிக் கொள்ளாதிருக்க, தமிழ்பேசும் மக்களும் இதில் குடியேறலாம் என அழைப்பு விடுக்கப்படும்; அங்கு குடியேறும் தமிழ்பேசும் மக்கள் பின்வரும் விதங்களில் இம்சைப்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

1. பாசன வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதில்லை.

2. பாசன வசதிகள் இருந்தாலும், அவை சிங்களப் பகுதிகளுக் கூடாக இருக்கும்.

3. இனக்கலவரங்கள் வெடிக்கும்போது, சிங்கள மக்கள், தமிழ்மக்களுக்கெதிராக ஏவிவிடப்பட்டு—அவர்களது உடமைகள், உயிர்கள் பறிக்கப்படும்.

4. சலுகைகள் பாரபட்சமுடன் வழங்கப்படும்.

இவ்வாறான அரசின் திட்டமிட்ட நடவடிக்கைகளால், குடியேறிய தமிழ்க் குடும்பங்கள், தாமாகவே வெளியேறிவிடுவர், அக்கிராமம் ஒரு சிங்களக் கிராமமாக, மாறிவிடும். இருப்பினும், சந்தர்ப்பம் வரும்போது அரசினர், 'தமிழ்மக்களை குடியேற்றியும அவர்கள் தங்கள் குடியிருப்பை விட்டுவிட்டுச் சென்றுவிட்டனர்' எனத் தமிழ்பேசும் மக்களையே சாடுவர்.

கடந்த வருட இறுதியில் வடமாகாணத்தில் சிறிலங்கா அரசு ஏற்படுத்திய குடியேற்றம் வித்தியாசமானதாகும் முல்லைத் தீவு மாவட்டத்தில் உள்ள டொலர், கென்ற் பண்ணைகளில் குடியேறிய மலையகத் தமிழர்கள் துரத்தப்பட்டு, இவ்விடத்தில், கொலைக் குற்றங்கள் புரிந்து தண்டனை பெற்ற சிங்களக் கைதிகளைக் குடியேற்றியிருக்கின்றது இலங்கை அரசு! இவ்வாறு, இனவாத அடிப்படையிலும், தமிழ்பேசும் மக்களுக்கு நெருக்கு வாரத்தைக் கொண்டுவரும் நோக்குடனும் குடியேற்றத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இருப்பினும், இப்போதுகூட தமது 'குடியேற்றக் கொள்கைகள்' இல் இருந்து அரசு விலகவில்லை. தமிழர் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் சிங்கள மக்கள் குடியேற்றப்படப் போகின்றார்கள். இதற்காக 30,000 சிங்களக் குடும்பங்கள் தயார்படுத்தப்படுகின்றனர். தொகுதி வாரியாக பரவலாக இக்குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்கள். இவர்களது தற்பாதுகாப்பிற்காக — இவர்களுக்குத் துப்பாக்கி சுடும் பயிற்சிகளும், துப்பாக்கிகளும் அளிக்கப்படவுள்ளன.

சிறிலங்கா அரசு கைக்கொண்டுள்ள இம்முர்க்கத்தனமான கொள்கைகளால் விபரீத விளைவுகளே ஏற்பட வழிகளுண்டு. அன்றி, அவர்கள் எதிர்பார்ப்பதுபோல், தமிழ் பேசும் மக்களது பலத்தைக் குறைக்கவோ, அவர்களது போராட்டத்தை மழுங்கடிக்கவோ, இத்தகைய ஏற்பாடுகள் எள்ளளவும் வழிவகுக்கப் போவதில்லை.

இதன் விளைகளை அனுபவிக்கப் போகின்றவர்கள் அப்பாவிச் சிங்கள மக்களே! சிறிலங்கா அரசு அல்ல!! அது, தனது அட்டகாசத்தைக்காட்ட, சிங்கள மக்களைப் பலிகொடுப்பதற்கும் தயங்கப்போவதில்லை, இவற்றை சிங்கள மக்களாவது அல்லது அங்குள்ள முற்போக்கு சக்திகளாவது உணர்ந்தாலே போதும்! பிரச்சினைகள் இலகுவாகத் தீர்ந்துபோகும், அதாவது, இலங்கை மக்களின் பொது எதிரியை—சிங்கள மக்கள், இனங்கண்டு கொள்ள இதுவொரு அரிய சந்தர்ப்பம்! அவர்கள் ஒழுங்காகச் செயறபடத் தொடங்கும்போதுதான், நமது விடிவு வெகுவாக முன்தள்ளப்படுதல் விரைவு படுததப்படும்!!

---

(8ம் பக்கத் தொடர்ச்சி)

மேலே ஆராயப்பட்ட 'மனித உரிமைகள்' 'அடிப்படைச் சுதந்திரம்' போன்றவை பற்றி தமிழ்பேசும் மக்கள் சார்பாக நோக்குவதற்கு நமது நாட்டில் எத்தனையோ சான்றுகள் உள தமிழ்பேசும் மககளுக்கு சிறிலங்கா அரசால் நடத்தப்படுபவை எல்லாம் மனித உரிமைகள் மீறல், அடிப்படைச் சுதந்திரம் பறிக்கப்பட்டமை போன்றவற்றில் எழுந்த ஒடுக்குமுறைகளே!

மேலும், இலங்கையில் தலைவிரித்தாடும் பணவீக்கத்தினால் பொதுவாக இலங்கை மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் தாக்கம் மறக்க முடியாதது. விலைவாசியுயுவுர்களும், வேலையில்லாத திண்டாட்டங்களும் அங்கு எல்லாச் சமூகத்தினரையும் இப்போது பற்றிக் கொண்டுள்ளது. அரசின் கெடுபிடி நடவடிக்கைகளால் இலங்கை முழுவதிலும் உருவாகியுள்ள மாமூல் நிலைமையின்மை மூலமாகவும் அனைத்துச் சமூகங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் படித்தோர் வீதம் அதிகம் என்பதினாலும், சமூகத்தில் உள்ள படித்தோா மட்டத்தில் இப்பிரச்சினைகள் அலசப்பட்டுள்ளதாலும், இம்மாநாட்டின் தாக்கம் அதாவது அரசின் உள்நாட்டு, வெளியுறவுக் கொள்கைகளின், விளைவாக இலங்கை மக்கள் அனுபவித்துவரும் கஷ்டங்கள் — மிக விரைவாகவும். பரவலாகவும் இலங்கை மக்களிடத்தில் சிறிலங்கா அரசு மீதான வெறுப்பைக் கொண்டு வருமென்பதில் சந்தேகமில்லை.

இந்த நிலைமைகள் கூட நமது விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவான ஒரு நிலைமை என்பதில் தமிழ்பேசும் மக்கள் பெருமை கொள்ள வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

# வீர அஞ்சலி.



அன்பழகன்
(அன்பு)

தோழர் அன்பழகன் சுதந்திர நெருப்பை அடை காத்துக் கொண்டிருந்த அமைதியின் உருவம். கடின பயிற்சியின் பின் ஆயுதமயமாகிய இவ்வீரர் ஆயுதமற்று முகாமில் இருந்த வேளை சுற்றி வளைத்த அரச படையின் குண்டுக்கு இரையானார்.

சிறந்த சுடுதிறன் வாய்ந்த தோழர் தனபாலசிங்கம் அரச இராணுவத்தின் வலைக்கு இலக்காகி சிறையிருந்த வேளையிலேயே சுட்டுக் கொல்லப்பட்டார்.



தனபாலசிங்கம்
(இராஜன்)

இவ் விறப்புகளின் இடை வெளியில்
புதிய பாதங்கள் அணிவகுக்கும்
இழந்த இரத்தங்களில்
புதிய பாதைகள் புலப்படும்.

படிப்பகம்

www.padippakam.com

## விருப்பம்

அந்த வீராங்கனைகள்
கருக்கலில்
பயிற்சி மைதானத்தில்
துப்பாக்கிகள் ஏந்திய
தூய புஷ்பங்கள்,!
சீனாவின் புத்திரிகள் !!
இவர்களின் புதுமையான விருப்பம்
புடவைகள் அல்ல,
போர்க்காலச் சீருடைகள்

- மாவோ

படிப்பகம்

www.padippakam.com

# மொழியின் பேரால், இனத்தின் பேரால் எப்போது அமைதி சாத்தியம்?



சுரண்டலையும், இலாபம் சேர்ப்பதையும், பகைமையையும் அடிப்படையாகக் கொண்ட முதலாளிய சமுதாயத்தில் தேசிய அமைதி சாத்தியப்படாது. அது முரண்பாடுகளற்ற முழுமையான மக்கள் ஜனநாயகக் குடியரசின் கீழ்தான் சாத்தியமாகும். இத்தகைய குடியரசு, கீழ்க்கண்ட அடிப்படைச் சட்டத்தையுள்ளடக்கிய அரசியலமைப்பைக்கொண்டிருக்கும். இந்த அடிப்படைச் சட்டம், எல்லாத் தேசங்களுக்கும், மொழிகளுக்கும் முழுச்சமத்துவத்தை உத்தரவாதம் செய்யும் எந்தவொரு கட்டாய ஆட்சி மொழியையும் ஏற்காது. சொந்த மொழிகள் அனைத்திலும் கல்வி புகட்டுகின்ற பள்ளிகளை மக்களுக்கு வழங்குவதாக இருக்கும் எந்தவொரு தேசத்துக்கும் தனிச்சலுகை வழங்குவதையும், சிறுபான்மையினரின் உரிமைகள்மீது கைவைப்பதையும் தடை செய்கின்ற சட்டமாக இருக்கும்.

-லெனின்.

படிப்பகம்